வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
MARUTHI MONEY EXCHANGE
PERMIT NO:DFE/RD/0117
390, HOSPITALROAD, JAFFNA.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com    மலர் : 05    27.08.2024 செவ்வாய்க்கிழமை    இதழ் : 240    பக்கங்கள் : 12

# வடக்கு, கிழக்கில் நடந்த படுகொலைகளுக்கு நீதி!

## தேர்தல் அறிக்கையில் அநுர

- பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் நீக்கம்!
- இந்தியாவை அச்சுறுத்த இடமளியோம்!
- சகல அரசியல் கைதிகளுக்கும் விடுதலை
- திட்டமிட்ட குடியேற்றங்கள் நிறுத்தப்படும்!

கொழும்பு, ஓகஸ்ட் 27

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த காலத்தில் இடம்பெற்ற படுகொலைகள், காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் மற்றும் ஆட்கடத்தல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்தி நீதியை நிலை நாட்டுவோம்" - இவ்வாறு அநுரகுமார திஸநாயக்கவின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தியா உட்பட பிராந்திய நாடுகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்த இலங்கையை தளமாகப் பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம் - என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் அநுரகுமார திஸநாயக்க போட்டியிடுகிறார். அவர் தனது தேர்தல்

11



## தமிழரின் மொழி உரிமையை நாங்கள் உறுதிப்படுத்துவோம்!

கொழும்பு, ஓகஸ்ட் 27

"தமிழரின் மொழி உரிமையை அரச நிர்வாகம் ஊடாக உறுதிப்படுத்துவோம். அரச நிர்வாகத்தில் தமிழர் ஒருவர் தமிழ் மொழியில் கேள்வி எழுப்பும்போது அவருக்கு தமிழ் மொழியில் பதிலளிப்பதை கட்டாயமாக்குவோம்." - இவ்வாறு அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிடும் அநுரகுமார நேற்றைய தினம் தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டார். இதைத் தொடர்ந்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு

11

## தென்னிலங்கை வேட்பாளர்களின் அழைப்புகளுக்கு ஒருமித்து முடிவு!


### த. தே. பொதுக்கட்டமைப்பு தீர்மானம்

யாழ்ப்பாணம், ஓக. 27

தென்னிலங்கை வேட்பாளர்களின் அழைப்புகளை ஆராய்ந்து ஒருமித்து முடிவு எடுத்து அதன்படி நடப்பது என்று தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் பிரதிநிதிகள் நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் கூடினர். இதன்போதே மேற்படி முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

11



வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந் திருவிழாவில் கார்த்திகை திருவிழாவான நேற்று முருகப்பெருமான் வள்ளி, தெய்வானை சமேதராக வீதியுலா வந்த காட்சி. (படம்: ஐ. சிவசாந்தன்)

## தகராறில் மனைவிக்கு தீ மூட்டினார் கணவர்?

### பெண் படுகாயம்

யாழ்ப்பாணம், ஓக. 27

குடும்பத் தகராறில் மனைவியை கணவன் தீ வைத்து எரித்தார் என்று கூறப்படுகின்றது. இதில், படுகாயமடைந்த பெண் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் அச்சுவேலியில் இடம்பெற்றுள்ளது. இதில், இரு பிள்ளை களின் தாயான பாலகிருஷ்ணன் நிருத்திகா (வயது 28) என்பவரே படுகாயமடைந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருபவை வருமாறு, கணவனுக்கும் மனைவிக்கும்

11

## அபிவிருத்தித் திட்டங்களில் வட, கிழக்குக்கு முன்னுரிமை!

### நாமல் ராஜபக்ஷ சொல்கிறார்

கொழும்பு, ஓக. 27

அபிவிருத்தித் திட்டங்களில் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் கிடையாது - என்று சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

"அன்பான தாய், தந்தையரே மூத்த மகன் ஊருக்கு வருகிறேன்" என்ற கருப்பொருளில் அம்பாந்தோட்டையில் நடத்திய மக்கள் சந்திப்பின்

11

### இந்திய போர் கப்பலை தொடர்ந்து

## சீனாவின் மூன்று போர் கப்பல்கள் அடுத்தடுத்து கொழும்பு வருகை!

கொழும்பு, ஓக. 27

சீன கடற்படைக்கு சொந்தமான மூன்று போர் கப்பல்கள் நேற்று திங்கட்கிழமை அடுத்தடுத்து கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தன.

இந்தியாவின் போர் கப்பலான ஐ. என்.

11

## ஐ. நா. குற்றச்சாட்டுகளை மறுக்கிறது இலங்கை அரசு!

கொழும்பு, ஓக. 27

ஐக்கிய நாடுகள் (ஐ. நா.) மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் முன்வைத்த குற்றச்சாட்டுகளை இலங்கை அரசாங்கம் மறுத்துள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் குறித்த ஆணையாளரின் அறிக்கை அண்மையில் வெளியிடப்பட்டது. இதில், மனித உரிமைகள்

11

## பெண்களுக்கு மாதம் ரூ.20,000; 24 மாதங்களில் வறுமை ஒழியும்!

### திட்டம் சொல்கிறார் சஜித்

கொழும்பு, ஓக. 27

வறுமை ஒழிப்புத் திட்டத்தின் மூலம் பெண்களுக்கு மாதாந்தம் 20 ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தை முன்னெடுப்போம். இதன் மூலம் 24 மாதங்களில் வறுமையை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் 16ஆவது பொதுக் கூட்டம் திருகோணமலை

11

## சுவிஸிலிருந்து வந்தவர் வவுனியாவில் கொலை!

- கோகுலன் -

வவுனியா, ஓக. 27

புலம்பெயர்ந்து சுவிஸில் வசித்தவர் விடுமுறையில் வவுனியாவுக்கு வந்த நிலையில் அடித்துக் கொல்லப்பட்டார். உறவினர் ஒருவருடன் மது அருந்தியபோது ஏற்பட்ட தகராறே இந்தக் கொலைக்குக் காரணம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

11

## கொக்குவில் விபத்தில் முகாமையாளர் பலி!

யாழ்ப்பாணம், ஓக. 27

கொக்குவிலில் இடம்பெற்ற விபத்தில் யாழ். பிரதேச செயலக சமுர்த்தி வங்கி முகாமையாளர் உயிரிழந்தார். பத்மநாதன் ஐங்கரன் (வயது 50) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.நகரில் உணவகத்துக்கு 'சீல்'

யாழ்ப்பாணம், ஒக. 27

யாழ். மாநகர பகுதியில் உணவகம் ஒன்றை 'சீல்' வைத்து மூட உத்தரவு பிறப்பித்தது யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிவான் நீதிமன்றம். அத்துடன், 2 உணவகங்கள் மற்றும் மருந்தகம் ஒன்றுக்கும் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தது.

யாழ்ப்பாணம் மாநகர பொதுச் சுகாதார பரிசோதகர் யோ. ரவீந்திரன் மற்றும் பொது சுகாதார பரிசோதகர் யோ. சகிந்தன் தலைமையிலான குழுவினர் கடந்த 15ஆம் திகதி திடீர் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இந்த நடவடிக்கையில், உணவகங்கள், மருந்தகங்கள், பலசரக்கு கடைகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது, சுகாதாரமற்ற முறையில் இயங்கிய மற்றும் காலவதியான பொருட்களை விற்பனை செய்த இரு உணவகங்களும் ஒரு மருந்தகமும் இனங்காணப்பட்டன.

இதையடுத்து, மூன்று நிலையங்களுக்கும் எதிராக நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்குகளும் நேற்றைய தினமே விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

விசாரணையில் சுகாதாரமற்ற முறையில் இயங்கியதுடன், காலாவதியான பொருட்களையும் விற்பனை செய்த உணவகத்தை குறைபாடுகள் திருத்தப்படும் வரை சீல் வைத்து மூடுமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார். அத்துடன், அந்த உணவகத்துக்கு ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

மேலும், காலாவதியான பொருட்களை விற்ற மற்றோர் உணவகத்துக்கு 30 ஆயிரம் ரூபாயும், மருந்தகத்துக்கு 20 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து மேலதிக நீதிவான் எஸ். லெனின்குமார் உத்தரவிட்டார். (ஐ)



# அமிர்தலிங்கம் ஜனன தினம் நேற்று கொண்டாடப்பட்டது!

யாழ்ப்பாணம், ஒக. 27

நாட்டின் முதல் தமிழ் எதிர்க்கட்சித் தலைவரான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 97ஆவது ஜனன தினம் அவர் பிறந்தநாளான நேற்று (ஓகஸ்ட் 26) கடைப்பிடிக்கப்பட்டது.

பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடந்த நிகழ்வில், வலிகாமம் மேற்கு பிரதேச சபை முன்றலில் அமைந்துள்ள அன்னாரின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்தும், மலர் தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து கேக் வெட்டியும் கொண்டாடப்பட்டது.

நிகழ்வில் பண்ணாகம் கிராம அபிவிருத்தி சங்கத்தினர், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)


# ஜனாதிபதி தேர்தல் விதிமீறல்; ஆயிரம் கடந்தது முறைப்பாடு

கொழும்பு, ஒக. 27

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை (ஜூலை மாதம் 31 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி வரை) 1,052 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 472 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 534 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 4 முறைப்பாடும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 42 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் சிறீலசிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் 43ஆவது பீடாரோகன விழா நேற்று நடைபெற்றபோது...

# யானை தாக்கி ஒருவர் மரணம்

வவுனியா, ஒக. 27

யானை தாக்கியதில் வவுனியாவில் ஒருவர் உயிரிழந்தார்.

வவுனியா - போகஸ்வெவை பகுதியில் நேற்று திங்கட்கிழமை காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வயலுக்கு சென்றவரே யானையின் தாக்குதலில் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை போகஸ்வெவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கடலில் குளித்த இளைஞன் மாயம்!

சிலாபம், ஒக. 27

புத்தளம், மாரவில கடலில் மூழ்கி இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் காணாமல் போயுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

கந்தவத்தை வெலிபன்ன கஹமுல பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞன் ஒருவரே காணாமல் போயுள்ளார்.

இந்த இளைஞன் மேலும் சிலருடன் இணைந்து மாரவில கடலில் நீராடிய நிலையில் திடீரென நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# மாடு திருடிய சந்தேகத்தில் சாவகச்சேரியில் இருவர் கைது!

தென்மராட்சி, ஒக. 27

சாவகச்சேரியை சேர்ந்த பயனாளி ஒருவருக்கு வாழ்வாதாரத்துக்காக வழங்கப்பட்ட பசுமாட்டை திருடிய இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

தனது பசு மாடு காணாமல் போனது தொடர்பில் பாதிக்கப்பட்டவர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இது தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் அச்செழுவை சேர்ந்த இருவரை சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# அதிபரை மாற்றக் கோரி மன்னாரில் போராட்டம்!

மன்னார், ஒக. 27

மன்னார் வங்காலை புனித ஆனாள் கல்லூரி தேசியப் பாடசாலையின் அதிபரை உடனடியாக மாற்றுமாறு கோரி பெற்றோர், பழைய மாணவர்கள் இணைந்து பாடசாலைக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், "பிள்ளைகளின் கல்வியை பாழாக்காதே", "ஒழுக்கம் இல்லாத உன்னால் எப்படி ஒழுக்கமான சமுதாயத்தை உருவாக்க முடியும்?", "ஒரு குடும்பத்துக்காக ஊரை அழிப்பதா?", என்று கோஷங்களை எழுப்பியதுடன் அது தொடர்பான வாசகங்கள் அடங்கிய பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

குறித்த பாடசாலை கல்வி, விளையாட்டு மற்றும் இதர நடவடிக்கைகளில் பல சாதனைகளை படைத்துள்ளது. இந்த நிலையில், அதிபரின் செயல்திறனற்ற தன்மையால் பாடசாலையின் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று குற்றஞ்சாட்டியே பெற்றோர், பழைய மாணவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)



# நல்லூர் பெருந்திருவிழாவில் இன்று!

யாழ்ப்பாணம், ஒக. 27

நல்லூர் பெருந்திருவிழா நாட்களில் சிறீலசிறீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5.30 மணி வரை கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று வருகின்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இன்று செவ்வாய்க்கிழமை இணுவில் தமிழ் சங்க பஜனை குழுவினரின் நிகழ்வு நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (ஐ)

• • •

யாழ்ப்பாணம், ஒக. 27

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சிறப்பு நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றது. நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடத்தப்படும் இந்த நிகழ்வில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் சிறீலசிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் தொண்டு நாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க நிகழ்வு ஆரம்பமாகும்.

சாவகச்சேரி மாவடிப் பிள்ளையார் கோவில் பிரதம குரு பிரம்மசிறீ பரமானந்தக் குருக்கள் சனாதன சர்மா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பாலசுப்பிரமணியம் தனபாலன் பிரதம அதிதியாகவும் தமிழ் நாடு முனைவர் வே. சங்கர நாராயணன் கௌரவ அதிதியாகவும் சாவகச்சேரி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இராமநாதன் சர்வேந்திரன், சாவகச்சேரி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் திருமதி ஜெயசிறீ சிவகனந்தராசா ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் பங்கேற்பர்.

இதில், நுணாவில் சிறீ வீரபத்திரர் ஆலய அறநெறி பாடசாலை , சாவகச்சேரி பழனி ஆண்டவர் அறநெறி பாடசாலை, அல்லாரை அறுகம்புலம் அறநெறி பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர்.

விசேட நிகழ்வாக அல்லாரை அறுகம் புலம் அறநெறி பாடசாலை மாணவர்களின் பக்தி இசை நிகழ்வும் நடைபெறவுள்ளன என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநிருத்தனன் தெரிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
27.08.2024 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம், ஆவணி 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இது 'டீல்' அல்ல...


தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாடு எதிர்பார்த்ததை விடவும் அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகின்றது. முடிவெடுக்க முடியாமல் தமிழ் அரசுக் கட்சி தடுமாறிக் கொண்டிருக்கின்றது. சுமந்திரன் இப்போதும் கட்சியின் முடிவைக் கட்டுப்படுத்தக்கூடிய ஒருவர்தான் என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்திருக்கின்றார். இதுவரையில் கட்சியால் உத்தியோகபூர்வ முடிவை எடுக்க முடியவில்லை. மறுபுறம் தென்னிலங்கை வேட்பாளர்கள் - குறிப்பாக, ரணில் விக்கிரமசிங்கவும் சஜித் பிரேமதாஸவும் பொது வேட்பாளர் தொடர்பில் அச்சமடைந்திருக்கின்றனர். இதன் காரணமாகவே பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்குத் தூது விட்டுக் கொண்டிருக்கின்றனர். முன்னர் ஓர் அழைப்பை விடுத்திருந்த ரணில் மீண்டுமொரு தூது அனுப்பினார் என்று பொதுக் கட்டமைப்பினர் மூலம் அறிய முடிகின்றது. எனினும், பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் அதனை மறுத்துவிட்டன.

தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பு ஒப்பீட்டடிப்படையில் ஒரு முன்னேற்றகரமான வடிவமாகும். ஏனெனில், கடந்த பதினைந்து வருடங்களில் தமிழ் பொது மக்கள் அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் உடன்பாட்டின் அடிப்படையில் செயல்பட்டு வருகின்றன. இது தமிழ்த் தேசிய அரசியலுக்கு புதிது - இன்னொருவகையில் முற்றிலும் வித்தியாசமானது. ஒன்றை ஒன்று கட்டுப்படுத்த முடியாவிட்டாலும் ஒன்றை ஒன்றால் மீறிச்செல்ல முடியாத ஒரு பொறியாகவே தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பு இருக்கின்றது. தமிழ்த் தேசிய அரசியலுக்கு இவ்வாறான இடைக்கால அமைப்புகள் கட்டாயமானவை. அப்போதுதான் தமிழ்த் தேசிய அரசியலை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும்.

தமிழ்ப் பொது வேட்பாளர் ஒரு சமரசமற்ற தமிழ்த் தேசிய நகர்வாகும் - இது ஒரு 'டீல்' அல்ல. 'டீல்' என்றால்தான், தென்பகுதி வேட்பாளர்களுடன் பேச வேண்டும். தமிழ்த் தேசிய அரசியல் எப்போதுமே ஒரு டீலாக இருக்க முடியாது. இதனை ஒரு டீல் என்று பிரசாரம் செய்தவர்கள் படுமோசமாக தோல்வியடைந்திருக்கின்றனர். அவர்கள் இப்போது தமிழ்ப் பொது வேட்பாளரின் தேவையை நிராகரிக்கப் புதிய காரணங்களைக் கண்டுபிடிக்க முற்படுகின்றனர்.

தமிழ்ப் பொது வேட்பாளர் எனப்படுவது, தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு - உள்ளுக்குள் சிதறிக் கொண்டிருக்கும் ஒரு மக்கள் கூட்டம் தன்னைத்தானே புடம் போடுவதற்கும் - தன்னைத்தானே புதுப்பித்துக் கொள்வதற்குமான ஓர் உபாயமாகும். ஓர் எழுச்சியை ஏற்படுத்துவதுதான் இதிலுள்ள அடிப்படை. ஒரு தேசிய இனம் நிமிர்வதற்கு முயற்சிக்கும்போது டீலுக்கு என்ன தேவையுண்டு. அதிகாரத்துக்கான ஆசையை முன்னிறுத்தி செயல்படும் போதுதான் டீல் தேவைப்படும். டீல் எப்போதுமே சுயநல அதிகார ஆசை கொண்டது. அதிகார ஆசை என்பது எப்போதுமே ஓர் இனத்தை வரலாற்றில் முன்னோக்கி நகர்த்துவதற்கு பயன்படாது. அந்த அடிப்படையில் தமிழ்ப் பொது வேட்பாளர் காலத்தின் கட்டாயம். காலத்தைத் தவறவிட்டால் கண்டவரெல்லாம் கதவைத் தட்டக் கூடும்.

எனவே, தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாடு ஒரு டீல் அல்ல - டீலுக்கானதும் அல்ல.



## நல்லூரான் திருவடி - 19

# வழிநடத்தும் யோகரின் போதனைகள்!

பண்டிதை
திருமதி பத்மாசனி இராஜேந்திரா
(புலோலி)

எனக்கு ஏற்பட்ட சுகவீனமொன்றுக்கு ஆட்டுப்பால் குடித்தால் நல்லது என்று பலரும் சொல்வதைக் கேட்டு ஆடுகளை வளர்த்து பால் குடித்தேன். ஆடுகள் ஒன்று நான்காகப் பெருகி முப்பது ஆடுகள் வரை என்னிடம் இருந்தன.

சுவாமிகள் ஒருதடவை என்னிடம் வந்து எனது ஆடுகளைக்கண்டதும், " நீ ஏன் இந்த ஆடுகளை வளர்க்கிறாய்? உனக்கு இந்த வேலை வேண்டாம். ஆட்டுப்பால் குடிப்பதால் மனம் ஒருநிலைப்படாது. ஆடு இதிலே ஒரு கடி, அதிலே ஒரு கடி என்று தின்னும் வழக்க முடையது. அதுபோல், உனக்கும் ஒரு நேரம் வரும். வெள்ளாடு கள்ளி கடிப்பது போல என்று சொல்வது தெரியாதோ? ஆடுகளை இறைச்சிக்குத்தான் விற்க வேண்டிவரும். ஒருவர் ஆடுகளை வளர்த்து சனி, புதன்கிழமைகளில் இறைச்சிக்காக விற்பார். அவர் தனது இறுதிக் காலத்தில் பல நாட்கள் படுக்கையில் இருந்து அவஸ்தைப்பட்டார். ஆடுகளின் கழுத்தை வெட்ட முன்பாக திருகுவதுபோல அவருக்கும், கழுத்து திருகப்படும்போது ஏற்படும் வேதனைபோல ஏற்பட்டு அவஸ்தைக்குள்ளாகி இறந்தார். உனக்கு இந்த வேலை வேண்டாம். ஆடுகளை விற்றுவிடு. வேண்டுமானால் பசுக்களை வளர்த்துவிடு " எனக்கூறினார்.


மறுநாளே ஆடுகளை அகற்றிவிட்டேன். அன்று முதல் ஆட்டுப் பாலைத் தொடுவதில்லை. தவறாக எதனையும் செய்யும்போது அவர் எனக்கு சரியான வழியை எப்போதும் காட்டினார்.

அவர் கூறிய நற்சிந்தனை வசனங்கள் எனது மனதில் இன்று வரை ஆழப்பதிந்துள்ளன. அவையாவன: "பெயருக்கும் புகழுக்கும் எதனையும் செய்யாதே. உண்மையாக ஒருவருக்கு நன்மை உண்டாகும் என்று கருதினால் மட்டுமே ஒன்றைச்செய் அல்லது ஒன்றை எழுது, ஒன்றைப் பேசு இல்லையேல், சும்மா இருந்துவிடு. கடவுளை வழிபடு. தியானம் செய். ஏனையோருக்கு கேடு நினைக்காதே. தீய எண்ணங்கள் மனதில் வந்தால் தியானம் செய். மிதமான உணவுதான் புலனடக்கத்துக்கு வழி. உள்ளும் புறமும் தூய்மையோடு இரு. மனதை தைரியத்தோடு வைத்து, 'றை எதிர்கொள். முடியுமானவரை வீண்வார்த்தை பேசுவதை தவிர்த்துவிடு. மனதில் அச்சம் குடிகொள்ள விடாதே" என்று, யோகரது ஆச்சிரமத்துக்கு நான் போகும் போதெல் அவர் உபதேசித்தார்.

அத்துடன், சுவையான உணவளித்து, பலமணி நேரம் அங்கு தங்கவைத்துக் கொள்வார். "உலக விடயங்களில் வீணே தலையைப்போட்டு குழப்பிவிடாது, ஆன்ம ஈடேற்றத்துக்கான வழியைப்பார்" என்று போதிப்பார். அவரது போதனைகள், என்னை எக்கணமும் பிரியாதிருந்து வழி நடத்தியதையே உணர்ந்து கொண்டேன்.

**தொகுப்பு: அனந்த பாலகிட்ணர்**
(நாளை தொடரும்)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு






**மேடம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்கள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். சலுகைகள் தாமதமாக கிடைக்கும். பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டும்.

**மிதுனம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். மேலதிகாரிகளிடம் விவாதம் வேண்டாம். தடைகளை தாண்டி முன்னேறுவீர்.

**கடகம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சிகளை அதிகாரி பாராட்டுவார். மதிப்புக் கூடும் நாள்.

**சிம்மம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். மதிப்பு உயரும் நாள்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். மேலதிகாரி உதவுவார். வியாபாரத் தில் போட்டிகள் குறையும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். நயமாகப் பேசுபவர்களை நம்ப வேண்டும். அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள். எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.

**விருட்சிகம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். பிள்ளைகள் பொறுப்பாக செயல்படுவார்கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**தனுசு**
பணப்புழக்கம் அதிகரிக்கும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். திடீர் யோகம் கிட்டும்.O

**மகரம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். கனவு நனவாகும் நாள்.

**கும்பம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**மீனம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன் பிறந்தவர் பாசமழை பொழிவார்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். பொறுப்புகள் தேடி வரும். தைரியம் கூடும்.

# தி. மு. கவுக்கும் பா. ஜ. கவுக்கும் பெரிய வித்தியாசம் இல்லை!

## சீமான் விமர்சனம்



அரியலூர், ஒக. 27

தி. மு. க., பா. ஜ. கவுக்கு இடையே பெரிய வித்தியாசம் எல்லாம் கிடையாது என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

அந்தக் கட்சியின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் அரியலூரில் நடைபெற்றது. இதன்போது, தி. மு. கவும், பா. ஜ. கவும் வேறு வேறு அல்ல. இரு கட்சிகளுக்கும் பெரிய வித்தியாசம் கிடையாது. தங்கள் கட்சியில் 100 சதவீதம் இந்துக்கள் இருப்பதாக பா. ஜ. கவினர் கூறுகின்றனர். தி. மு. கவில் 90 சதவீத இந்துக்கள் இருப்பதாக முதல்வர் மு. க. ஸ்டாலின் கூறுகிறார். எனவே, இரண்டுக்கும் 10 சதவீதம்தான் வித்தியாசம்.

விஜய் தனது கட்சி மாநாட்டுக்கு என்னை அழைக்க மாட்டார். அழைக்கவும் கூடாது. அவரது கட்சியின் தொடக்க விழாவுக்கு, மற்றவர்களை அழைக்க மாட்டார்.

நாம் தமிழர் கட்சி எப்போதும் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் என்று நான் முடிவெடுத்து இருக்கிறேன். ஆனால், தேர்தல் காலத்தில் கட்சி நிர்வாகிகள் என்ன முடிவு எடுக்கிறார்கள் என்பதைப் பொறுத்து, கூட்டணி குறித்து யோசிப்பேன். 2026இல் நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலுக்காக, 50 தொகுதிகளில் வேட்பாளர்களை தெரிவு செய்துவைத்துள்ளேன்- என்றார். (எ)

# “பயப்பட வேண்டாம் தவறிவிடமாட்டேன்” ரஜினியின் அறிவுரையை ஏற்ற ஸ்டாலின்

சென்னை, ஒக. 26

“மனந்திறந்து என்னை ஊக்கப்படுத்தக்கூடிய வகையில் பேசிய நடிகர் ரஜினிகாந்துக்கு நன்றி. என்னைவிட அவர் ஒரு வயது கூடதான், அறிவுரையும் சொன்னார். அவர் சொன்ன அத்தனையையும் நான் புரிந்து கொண்டேன். பயப்பட வேண்டாம். எதிலும் நான் தவறிவிட மாட்டேன்” என முதல்வர் மு. க. ஸ்டாலின் தெரிவித்தார்.

சென்னை - கலைவாணர் அரங்கில் அமைச்சர் எ.வ. வேலு எழுதிய “கலைஞர் எனும் தாய்” என்ற நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இந்த நிகழ்வில் உரையாற்றிய ரஜினிகாந்த், “விமர்சனங்கள் தேவை. அவை மழை போல இருக்க வேண்டும். புயல் போல இருக் கக் கூடாது. மற்றவர்கள் மனதை நோகடிக்கக் கூடாது.



கருணா நிதி குறித்து படம் எடுக்க வேண் டும் என நான் கேட்டுக் கொள் கிறேன்- என்றார். (எ)

# திராவிட கட்சிகளை அகற்ற பா. ஜ. கவால் மட்டுமே முடியும்

## சொல்கிறார் அண்ணாமலை

சென்னை, ஒக. 27

தமிழகத்தில் திராவிட கட்சிகளை அகற்ற பா. ஜ. கவால் மட்டுமே முடியும் என்று சென்னையில் நடந்த பொதுக்கூட்டத்தில் அந்தக் கட்சியின் தமிழக மாநில தலைவர் அண்ணாமலை உறுதிபட தெரிவித்தார்.

தமிழக பா. ஜ. க. சார்பில் சென்னையில் “தமிழகம் மீட்போம், தளராது உழைப்போம்” என்ற தலைப்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர்கள் துரைமுருகன், எ.வ.வேலு போன்றோர் இருக்கும்போது, அரியணை உதயநிதிக்கு சென்றால் கலவரம் வெடிக்கும் என்பதை ரஜினிகாந்த் சுட்டிக்காட்டி உள்ளார். தி. மு. கவினர் பழநியில் அரசியல் செய்து கொண்டிருக்கின்றனர். சனாதன தர்மத்தை வேரறுப்போம் எனக் கூறியவர்கள், பழநிக்கு பால்காவடி எடுப்பதற்குப் பதிலாக, முத்தமிழ் முருகன் மாநாடு என்று அரசியல் காமெடி செய்து கொண்டிருக்கின்றனர். தமிழ் கலாசாரத்தை சீரழித்தவர்களை முருகன் நிச்சயம் தண்டிப்பார்.

பா. ஜ. க. தமிழகத்தில் ஆட்சிக்கு வரவேண்டும் என்றால் சொந்த பலத்தில் நிற்க வேண்டும். நமக்கு தி. மு. க., அ. தி. மு. க. இரு தரப்பினரும் எதிரிகள்தான்- என்றார். (எ)

## தி. மு. க. - பா. ஜ. க. வெளியே எதிரி, உள்ளே உறவு

# “உழைக்காமல் பதவிக்கு வந்தவரே பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை”

சேலம், ஒக. 27

தி. மு. க. - பா. ஜ. க. கட்சிகள் வெளியே எதிரியாகவும், உள்ளே உறவாகவும் உள்ளன என்றும் உழைக்காமல் பதவிக்கு வந்தவர் பா. ஜ. க. தமிழக மாநில தலைவர் அண்ணாமலை. அவருக்கு வாய்தான் முதலீடு எனவும் அ. தி. மு. க. பொதுச் செயலாளர் பழனிச்சாமி கடுமையாகச் சாடியுள்ளார்.

சேலம் அ. தி. மு. க. மாவட்ட அலுவலகத்தில், கட்சி சட்டத் தரணிகள் அணியினர் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் பங்கேற்ற பழனிச்சாமி, பின்னர் செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் 30ஆம் திகதி மாபெரும் கவனவீர்ப்பு

**யாழிலும் திருமலையிலும் நடத்த ஏற்பாடு**

முல்லைத்தீவு, ஓக. 27

**சர்வதேச வலிந்து காணாமல், ஆக்கப்பட்டோர் தினமான 30ஆம் திகதி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடாத்தவுள்ளனர்.**

இந்த போராட்டம் வலுப்பெற அனைவரும் அணி திரண்டு ஆதரவு வழங்குமாறும் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சர்வதேச வலிந்து காணாமல், ஆக்கப்பட்டோர் தினம் எதிர்வரும் 30 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுவதுடன், சுமார் 15 ஆண்டுகாலாக இன்னும் இதற்கு ஒரு தீர்வு இல்லை.

இந்த நிலையில் சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான எதிர்வரும் 30 ஆம் திகதி வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வடக்கில் யாழ்ப்பாணத்திலும், கிழக்கில் திருகோணமலையிலும் காலை 10 மணியாவில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளார்கள்.

இந்த போராட்டம் வலுப்பெற அனைவரும் திரண்டு ஆதரவு வழங்கவேண்டும்-என்றுள்ளது. (அ)

# துப்பாக்கிகளுடன் இரண்டு பேர் கைது!

கொழும்பு, ஓக. 27

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட இரண்டு துப்பக்கியை தன் கைவசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் சகோதரர்கள் இருவர் நேற்று முன் தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளதாக மடுல் சீமை பொலிஸார் தெரிவித்தனர்.

52, 47 வயதுடைய மடுல் சீமை கல்லுல்ல கீழ் பிரிவு பகுதியைச் சேர்ந்த சகோதரர்கள் இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மடுல்சீமை பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய குறித்த பகுதிக்கு சென்று தேடுதல் மேற்கொண்டபோது வெவ்வேறு இடங்களில் இருந்து உளளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள் இரண்டு கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் மேலும் கூறினர்.

சந்தேக நபர்கள் இருவரையும் பசறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# எல்பிட்டிய பிரதேச சபைக்கான தேர்தல் அறிவிப்பு வெளியானது

கொழும்பு, ஓக. 27

எல்பிட்டிய பிரதேச சபை தேர்தலுக்கான அறிவிப்பு எல்பிட்டிய பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரினால் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, உள்ளூராட்சி அதிகார சபையின் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் படி எல்பிட்டிய பிரதேச சபையின் தவிசாளரையும் உப தவிசாளரையும் அச்சபையின் உறுப்பினர்களையும் தெரிவு செய்வதற்குரிய தேர்தலுக்கான வேட்பு மனுக்களை கையேற்கும் அறிவித்தலை தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

அதன்படி வைப்புப்பணம் கையேற்றல் நேற்று தொடக்கம் செப்ரெம்பர் 11ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை நடைபெறும் எனவும் வேட்பு மனு கையேற்றல் செப்ரெம்பர் 09ஆம் திகதியிலிருந்து செப்ரெம்பர் 12ஆம் திகதி நண்பகல் 12 மணிவரையும் காலி மாவட்ட செயலக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெறும் எனவும் தேர்தல்கள் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க அறிவித்துள்ளார். (அ)

# சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளுக்கு 31ஆம் திகதி காலை பவளவிழா நிகழ்வு


யாழ்ப்பாணம், ஓக. 27

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகளின் பவள விழாவும் "அறம் பாலிக்கும் ஞான மோகனம்" என்ற நூல் வெளியீடும் எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8:30 மணிக்கு ஒய்வு பெற்ற அதிபர் ஆ. சிவநாதன் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது

இந்நிகழ்வில் வரவேற்பு நடனத்தை பண்டாரவளை மகாவித்தியாலய மாணவிகளும் வரவேற்புரையை ஆசிரியர் க.கைலை நாதனும் ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீஸ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் பிரம்மஸ்ரீ ப மனோகர குருக்கள் ஆகியோர் ஆற்றுவர்.

நிகழ்வின் சிறப்புரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் ஆற்றுவார்.

நிகழ்வில் வெளியிடப்பட உள்ள அறம் பாலிக்கும் ஞான மோகனம் என்ற நூலின் வெளியீட்டுரையை கே எஸ் சிவஞானராசா ஆற்றுவார்.



சந்நிதியான் ஆச்சிரமத்தால் போசிக்கப்படும் நிறுவனங்கள் சார்ந்து மாவட்ட ரீதியான பிரதிநிதிகள் வாழ்த்துரைகள் வழங்குவர். ஆசிரியை சசி ரேகா ஜெயராசன் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை சார்பில் வாழ்த்து பா வழங்குவார். (அ)

# வட்டக்கச்சி விவசாய பண்ணை நெற்பயிர் கையால் அறுவடை

**100 ஏக்கர் நிலப்பரப்பில் போகம்**

முல்லைத்தீவு, ஓக. 27

முல்லைத்தீவு விசுவமடு சிவில் பாதுகாப்பு திணைக்கள கட்டளை பணியகத்தின் கீழ் இயங்கிவரும் வட்டக்கச்சி விவசாய பண்ணையில் பாரம்பரிய முறைப்படி நெற்பயிர் கையால் அறுவடை செய்யப்பட்டுள்ளது.


கிளிநொச்சி, விசுவமடு சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் இயங்கும் வட்டக்கச்சி வயல் செயற்திட்டத்தின் கீழ், மேற்கொள்ளப்படும் பாரம்பரிய முறையிலான நெல் அறுவடை நேற்று முன் தினம் இடம் பெற்றது.

குறித்த செயற்திட்டத்தின் கீழ், 100 ஏக்கர் நிலப்பரப்பில் பெரும்போகம், சிறுபோகம் என இரு போகங்களாக நெல் பயிரிடப்பட்டு வருவதுடன் இங்கு 100 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

அந்த வகையில் நேற்று முன் தினம் சிறுபோக அறுவடை பாரம்பரிய முறைப்படி இடம் பெற்று அதிக மனித வலுக்களை பயன்படுத்தி குறைந்த செலவில் அறுவடை இடம் பெற்றது.

வட்டக்கச்சி வயல் செயற்திட்டத்தில் இனி வரும் காலங்களில் அதிகளவான விளைச்சலை பெற்று வருமானத்தை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (அ)

# 97 வயதில் முதுமாணிப்பட்டம்!



கொழும்பு, ஓக. 27

இலங்கையில் 97 வயது மூதாட்டி ஒருவர் முதுமாணிப் பட்டம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற களனிப் பல்கலைக்கழகத்தின் 143ஆவது பட்டமளிப்பு விழாவில் லீலாவதி தர்மரத்ன என்ற மூதாட்டி பௌத்த கற்கைகளில் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

இளந் தலைமுறையினருக்கு முன்னுதாரணமாக திகழும் அவர் பட்டம் பெற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்-

கல்வி கற்பதற்கு வயது ஒரு தடையல்ல-என்றார்.

லீலாவதி தர்மரத்ன இதற்கு முன்னர் ஆசிரியையாக கடமையாற்றியுள்ளார். (அ)

# பிரசார நடவடிக்கைகளுக்கு விமானங்கள் பாவிக்க தடை!

கொழும்பு, ஓக. 27

ஜனாதிபதித் தேர்தல் கூட்டங்கள் மற்றும் பிரசார நடவடிக்கைகளுக்காக பல்வேறு பகுதிகளுக்கு செல்ல அரசு செலவில் விமானப்படை ஹெலிகொப்டர்கள் அல்லது விமானங்களை பயன்படுத்த தடைவிதிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு அனைத்து வேட்பாளர்களுக்கும் அறிவித்துள்ளது.

அரசாங்க விமானங்கள் தேர்தல் நோக்கத்துக்காக பயன்படுத்தப்பட்டால் அதற்கு பணம் செலுத்தவேண்டும் என தேர்தல் ஆணைக்குழு தலைவர் ரத்நாயக்க தெரிவித்தார்.

மேலும், தேர்தல் அல்லாத பிற கடமைகளுக்கு விமானங்களை பெற்றுக்கொள்ளக்கூடியவர்கள் அரசாங்க விமானங்களை அவ்வாறான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கு எவ்வித தடையும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# 5 வகை உரங்களின் விலைகள் குறைப்பு

கொழும்பு, ஓக. 27

அரச உர நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படும் ஐந்து வகையான உரங்களின் விலை 4,000 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயத்தை விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அத்தோடு, தேயிலைக்கான உர மானியத்தை வழங்குவதற்குத் தேவையான மொத்தத் தொகையான 2400 மில்லியன் ரூபாவை இலங்கை தேயிலைச் சபை வழங்கியுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

தேயிலைப் பயிர்ச்செய்கைக்கான உர மானியத் திட்டம் கடந்த வாரம் முதல் முன்னிலைப்படுத்தப் பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.



மேலும், தேயிலைப் பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்படும் ரி 200, ரி 750, யு 709, யு 834 மற்றும் ரி 65 ஆகிய ஐந்து வகையான உரங்களின் விலைகளை அரச உர நிறுவனம் குறைத்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் துன்பம் நீக்கி ரணில் பிறவிப் பயன் அடைந்துள்ளார்

## கூறுகிறார் வஜிர அபேவர்தன

கொழும்பு, ஓக. 27

**"நாட்டு மக்கள் பட்ட கஷ்டங்களை நிவர்த்தித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிறவிப் பயனை அடைந்துள்ளார்." - என்று ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறியவை வருமாறு-

இலங்கை மீண்டும் வங்குரோத்து நிலையை அடையாமல் இருக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைக் கட்டியெழுப்பி வருகிறார். பண்டாரநாயக்கவில் காலத்தில் ஒன்றுபட்டு சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. அதேபோன்ற நிலைமை நாட்டில் மீண்டும் உருவாகியுள்ளது.

அதற்காக தேசிய வரவு-செலவுத் திட்டமும், பொருளாதார மாற்றத்துக்கான சட்டமூலமும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதேபோல் பெண்களை வலுவூட்டுவதற்கான சட்டமூலங்களையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றியுள்ளார்.

அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை அதிகரித்துள்ளார். 'உறுமய' திட்டத்தின் கீழ் மக்களுக்கு காணி உறுதிகளை வழங்கினார். இலவசமாக அரிசி வழங்கினார்.



அரச ஊழியர்களுக்கு மேலும் 25 ரூபா வரையில் சம்பள அதிகரிப்பை வழங்குவதாக கூறியுள்ளார். இவை எவையும் தேர்தல் வாக்குறுதிகள் அல்ல. எனவே நாட்டு மக்கள் பட்ட கஷ்டங்களை நிவர்த்தித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிறவிப் பயனை அடைந்துள்ளார்-என்றார். (அ)

# செலுத்திய வரி குறித்து அறியும் முழு உரிமை மக்களுக்கு உண்டு!

## அநுரகுமார கூறுகிறார்

கொழும்பு, ஓக. 27

வரி செலுத்துபவர்களுக்குத் தாம் செலுத்திய வரிக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்து கொள்வதற்கான நியாயமான உரிமை உள்ளதாகத் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

வங்கிகள் மற்றும் நிதித்துறை மன்ற தொழில் வாண்மையாளர்களின் தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலே அவர் இந்த விடயத்தை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு நாடு என்ற வகையில் எங்களால் கடனை மீளச்செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வாறே எங்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான டொலர்களை ஈட்டிக்கொள்வதற்கு முடியாது போயுள்ளது.



இளைஞர்களுக்கு நாட்டில் தொழிலைத் தேடிக்கொள்ள முடியாமல் போயுள்ளது. எமது நாட்டை மிகவும் குறுகிய காலத்தில் செல்வம் மிக்க நாடாக மாற்ற முடியும்.

அது மாத்திரமன்றி, இரண்டு அல்லது மூன்று வருடங்களில் நீங்கள் செலுத்திய வரி எவ்வாறு செலவிடப்பட்டது என்ற விபரத்தை ஆண்டின் இறுதியில் உங்களுக்கு அனுப்பி வைப்போம்.

தாம் செலுத்திய வரிக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்து கொண்டார்களானால் எவரும் வரி செலுத்துவதைத் தவறவிடமாட்டார்கள்-என்றார்.

# வெளிநாட்டு தூதுவர்களை சந்திக்கும் வேட்பாளர்கள்!

கொழும்பு, ஓக. 27

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள், வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகளை சந்தித்து தமது திட்டங்கள் தொடர்பில் விளக்கமளிக்க திட்டமிட்டுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தலுக்கான விஞ்ஞாபனத்தை முன்வைத்த பின்னரே மேற்படி சந்திப்பை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளனர். இதற்குரிய ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

ஆளுங்கட்சி வேட்பாளர் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் கூட்டணி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் மொட்டு கட்சி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ இவ்வாறு வெளிநாட்டு தூதுவர்களை, சந்தித்து வெளிவிவகாரக் கொள்கை உள்ளிட்ட விடயங்களைத் தெளிவுபடுத்தவுள்ளனர்.

அதேவேளை இலங்கையில் நடைபெறும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் வெளிநாடுகள் கழுகுப்பார்வையை செலுத்தியுள்ளன. தமது நாட்டு தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகள் ஊடாக நிலைவரம் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. (அ)

# சதாசிவம், மஹ்ரூப் ரணிலுக்கு ஆதரவு!

கொழும்பு, ஓக. 27

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க முன்னாள் எம்.பிக்களான அப்துல்லா மஹ்ரூப் மற்றும் சதாசிவம் ஆகியோர் தீர்மானித்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து குறுகிய காலத்துக்குள் நாட்டை மீட்டெடுத்த ரணில் விக்கிரமசிங்கவின் ஆளுமையே இந்த நாட்டுக்குத் தேவையென்றும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து முன்னாள் எம்.பி. சதாசிவம் தெரிவித்ததாவது-

இரண்டு வருடங்களுக்கு முன்னர் எமது நாடு அதலபாதாளத்தில் வீழ்ந்ததை நாம் மறக்கவில்லை. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை பொருளாதார வீழ்ச்சியில் இருந்த போது படிப்படியாக மீளக் கட்டியெழுப்பியுள்ளார் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் பொருளாதாரத்தைப் போன்று நாட்டு மக்களின் பொருளாதாரத்தையும் புரிந்து கொண்ட அறிவார்ந்த தலைவரென ரணில் விக்கிரமசிங்கவை அறிமுகப்படுத்தலாம்-என்றார்.

முன்னாள் எம்.பி. அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்ததாவது:

ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்க அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தீர்மானித்திருந்தாலும் அந்த தீர்மானத்துக்கு உடன்படவில்லை.கட்சித் தலைவர் றிசாத் பதியுதீனுக்கு தனது தீர்மானத்தை தெரிவித்துள்ளேன்.

எனது ஆதரவாளர்களில் 95 வீதமானவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க விரும்புவதாக ஆறு மாதங்களாக கூறி வருகின்றனர். அவ்வாறான நிலையில் சஜித் பிரேமதாசவை நான் எவ்வாறு ஆதரிக்க முடியும்-என்றார். (அ)

# கொள்ளையர்களிடம் நாட்டை மீண்டும் கையளிக்க முடியாது

## சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு



கொழும்பு, ஓக. 27

நாட்டை மீண்டும் கொள்ளையர்களிடம் கையளிக்க முடியாதென, ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய குடியரசு முன்னணியின் கடுவல தொகுதி காரியாலயத்தை இன்று திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டை சிறந்த முறையில் வழிநடத்தக்கூடிய அனுபவம் மிக்கவர்கள் ஐக்கிய மக்கள் கூட்டணியிலேயே இருக்கின்றனர். சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஆட்சி அமைந்ததும், அனைத்து துறைகளும் டிஜிற்றல் மயமாக்கப்படும்.

வெற்றிலைக்கடை முதல் வாகன விற்பனை நிலையம் வரை அனைத்துக் கொடுப்பனவுகளும் டிஜிற்றல் முறையில் இடம்பெறும். எமது நாடு பெற்றுக்கொண்ட கடனை மீள செலுத்த 18 வருடங்கள் தேவைப்படுகிறது. ஆதலால், தூர நோக்கத்துடன் சிந்திக்கக்கூடிய ஆளுமை உள்ளவர்கள் தேவைப்படுகிறார்கள்.

அவ்வாறானவர்கள், எமது கூட்டணியை பிரதிநிதித்துவப்படுத்து கின்றார்கள். நாம் ரணில் விக்கிரமசிங்கவுடனும் பேச்சுவார்த்தை நடத்தினோம். எனினும், ஐக்கிய மக்கள் சக்தியே எமது கொள்கைகளை ஏற்றுக் கொண்டது-என்றார். (அ)

# இராஜாங்க அமைச்சுப் பதவிகள் எமது அரசாங்கத்தில் நீக்கப்படும்

## அநுரகுமார திசாநாயக்க கூறுகிறார்

கொழும்பு, ஓக. 27

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சு பதவிகள் வழங்கப்படாது என்றும் 25 அமைச்சரவை அமைச்சர்கள் மாத்திரமே அங்கம் வகிப்பர் எனவும் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் கொள்கை பிரகடனத்தை வெளியிடும் நிகழ்வு நேற்று கொழும்பில் சர்வமத தலைவர்கள், முக்கியஸ்தர்களின் பங்கேற்புடன் இடம்பெற்றது. அதன் போது கொள்கை பிரகடனத்தை வெளியிட்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஆட்சியில் இராஜாங்க அமைச்சு பதவிகள் இருக்காது. காரணம் அமைச்சரவை அமைச்சர்களுக்கும் இராஜாங்க அமைச்சர்களுக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் எதுவும் இல்லை. இராஜாங்க அமைச்சர்களால் அமைச்சரவைக் கூட்டத்திற்கு சமூகமளிக்க முடியாது அது மாத்திரமே வேறுபாடாகும். ஆகவே அநாவசிய செலவீனம் கட்டுப்படுத்தப்படும். மேலும் 25 அமைச்சரவை அமைச்சுக்களே அமைக்கப்படும்-என்றார். (அ)

# சஜித் பிரேமதாஸ ஆட்சியில் வரிச்சுமை குறைக்கப்படும்!

கொழும்பு, ஓக. 27

சஜித் பிரேமதாஸவின் ஆட்சியில் மக்களின் வரிச்சுமை குறைக்கப்படுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டு மக்கள் அதிக வரிச்சுமையால் பாரிய சவால்களை எதிர்நோக்கியுள்ளனர். மக்களால் தாங்கிக்கொள்ள முடியாதளவுக்கு அசாதாரண வரிவிதிப்பு நடைமுறையில் உள்ளது.

வாழ்க்கை செலவு அதிகரிப்புக்கேற்ப வருமானம் உயர்வடையவில்லை. ஆதலால், எமது ஆட்சியில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு தீர்மானித்துள்ளோம். எதிர்வரும் 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அரச ஊழியர்களின் சம்பளம் 24வீதத் தால் உயர்த்தப்படும். அதே போன்று சகல கொடுப்பனவுகளும் அடங்கலாக 57 ஆயிரத்து 500 ரூபாய் அடிப்படை சம்பள மாக நிர்ணயிக்கப்படும்.-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமல் ராஜபக்ஷ தோல்வியடைவார்

## எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 27

பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் உருவாக்கப்படும் பரந்துபட்ட அரசியல் கூட்டணி ஊடாகவே பொதுத்தேர்தலில் போட்டியிடுவோம். பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ படுதோல்வியடைவார் என்பதை உறுதியாக குறிப்பிட முடியும் என ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையில் பரந்துபட்ட அரசியல் கூட்டணியை உருவாக்குவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன.

கூட்டணியின் பெயர் மற்றும் சின்னம் தொடர்பான விபரங்களை வெகுவிரைவில் அறிவிப்போம். மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரும், பிரதமருமான தினேஷ் குணவர்தன தலைமையில் பரந்துபட்ட அரசியல் கூட்டணி அங்குரார்ப்பணம் செய்யப்படும்.இந்த கூட்டணி ஊடாகவே பொதுத்தேர்தலில் போட்டியிடுவோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் தீர்மானத்திலேயே பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த எம்மிடம் பலமுறை குறிப்பிட்டார். ஆனால் கட்சியின் நலன் விரும்பிகள் என்று குறிப்பிட்டுக் கொள்பவர்கள் இறுதித் தருணத்தில் அவரை தவறாக வழிநடத்தினார்கள்.

ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தேர்தலில் படுதோல்வியடைவார்-என்றார். (அ)

# மக்கள் வாழ வேண்டுமெனில் ரணிலே நாட்டை ஆளவேண்டும்!

## ருவான் விஜேவர்தன



கொழும்பு, ஓக. 27

"அடுத்த 5 வருடங்களுக்கு அவரின் தலைமைத்துவம் நாட்டுக்கு அவசியம்." - என்று ஐ.தே.க பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஐக்கிய தேசியக் கட்சி என்பது எப்பொழுதும் சவால்களுக்கு முகங்கொடுத்து வெற்றி கொண்ட கட்சி. பல தலைவர்களை உருவாக்கிய கட்சி. வெள்ளைக்காரர்களிடம் இருந்து நாட்டை மீட்டு சுதந்திரம் பெற்றுக் கொடுத்தவர் டி.எஸ். சேனநாயக்க.

உணவுப் பாதுகாப்பு சவாலை ஏற்று உணவு கொடுத்தவர் டட்லி சேனாநாயக்க. ஜே.ஆர். ஜெயவர்தன திறந்த பொருளாதாரத்தை அறிமுகம் செய்து நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தினார்.

வறுமையை ஒழித்து வீட்டுத் திட்டம் கொண்டுவர ஆர். பிரேமதாஸ பங்காற்றினார். பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டு சவாலில் இருந்து நாட்டை மீட்டவர் ரணில் விக்கிரமசிங்க. அவரின் தலைமைத்துவம் இன்று நாட்டுக்கு அவசியம்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ந்தபோதெல்லாம் நாட்டை மீட்டது ஐ.தே.க தான். ஏனைய தலைவர்கள் வாய்ப் பேச்சில் மாத்திரம் தான் வீரர்களாக இருந்தனர். ரணில் விக்கிரமசிங்க செயலில் பங்காற்றி வருகிறார்.

அடுத்த 5 வருடங்களுக்கு அவரின் தலைமைத்துவம் நாட்டுக்கு அவசியம். அவரின் வெற்றியை பெருவெற்றியாக்குவதற்கு கிராமம் கிராமமாகச் சென்று பணியாற்றுமாறு கோருகிறேன்-என்றார். (அ)

# ஐக்கிய மக்கள் கூட்டணியின் கொள்கை பிரகடனம் 29இல்!

கொழும்பு, ஓக. 27

ஐக்கிய மக்கள் கூட்டணியின் கொள்கை பிரகடனம் எதிர்வரும் 29ஆம் திகதி வெளியிடப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இயலும் சிறிலங்கா என்னும் தொனிப்பொருளில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார். ஆனால் விஸா மோசடியை பார்க்கிலும் அதிகளவிலான கொள்கை இயலும் சிறிலங்கா வேலைத்திட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்றது.

நாட்டிற்கு முதலீடுகள் வருவதாக தெரியவில்லை. காரணம் முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை அற்ற நிலையே காணப்படுகின்றது.

ஜனாதிபதியுடன் உள்ள தரப்பினர் மீது முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கையின்மையே காணப்படுகின்றது.

ஜனாதிபதியுடன் மோசடியாளர்களே இணைந்துள்ளனர். அவர்களால் நாட்டை எவ்வாறு கட்டியெழுப்ப முடியும். அதே வேளை ஐக்கிய மக்கள் கூட்டணியின் கொள்கைப்பிரகடனம் எதிர்வரும் 29ஆம் திகதி வெளியிடப்படும்-என்றார். (அ)

# விவசாயத்திற்கான இலகு கடன் முறைமை அறிமுகப்படுத்தப்படும்

## சஜித் பிரேமதாஸ உறுதிமொழி

கொழும்பு, ஓக. 27

விவசாயத்திற்காக நவீன உபகரணங்களைக் கொள்வனவு செய்து கொள்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியின் கீழ் இலகு கடன் முறைமை அறிமுகப்படுத்தப்படும் என ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அனுராதபுரம் - தம்புத்தேகம பகுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

10 இலட்சம் புதிய தொழில் முனைவோர்கள் உருவாக்கப்படுவர்.

தொழிலற்ற இளைஞர்களுக்கு, அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியுமான செலவுடன் கூடிய மூலதனத்தை அடிப்படையாகக் கொண்டு, விவசாயத் துறைக்குள் பிரவேசிப்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

அதனூடாக நவீன விவசாய உபகரணங்களைக் கொள்வனவு செய்து விவசாயம் செய்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

அதற்கமைய விவசாயத்திற்கான இலகு கடன் முறைமை அறிமுகப்படுத்தப்படும்-என்றார். (அ)

# "தமிழ் அரசினர் எனக்கே வாக்களிப்பர்"

யாழ்ப்பாணம், ஓக. 27

தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான சிவஞானம் சிறிதரன் தமிழ் பொதுவேட்பாளருக்கு தனது ஆதரவை தெரிவித்துள்ளதை போன்று ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் அவரைப் பார்த்து திருந்த வேண்டும் என தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக போட்டியிடும் எனக்கு ஆதரவு தருமாறு எவரையும் வற்புறுத்தவில்லை.

அவர்களாக உணர்ந்து வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது.

இலங்கை தமிழ் அரசு கட்சியைப் பொறுத்தமட்டில் பெரும்பாலானவர்கள் கொள்கைகளிலே உடன்பாடாக இருக்கின்றார்கள். அவர்கள் நிச்சயம் எனக்கு வாக்களிப்பார்கள்-என்றார். (அ)

# ஊழல் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி! ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 27

நாட்டில் ஊழல் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து தூய்மையான அரசியலை முன்னெடுப்பதே எமது பிரதான நோக்கமாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

வளமான நாடு சுகமான வாழ்வு என்றும் தொனிப்பொருளில் தேசிய மக்கள் சக்தியின் கொள்கைப் பிரகடனம் நேற்று காலை வெளியிடப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த ஹரிணி அமரசூரிய-

தேர்தல் நடைபெறும் போது போட்டியிடும் வேட்பாளர்கள் தங்கள் கொள்கை பிரகடனத்தை வெளியிடுவது வழக்கமானதே.ஆனால் நாட்டின் தற்போதைய நிலையில் நாட்டுக்கு பொருத்தமான மக்களுக்கு தேவையான கொள்கைத் திட்டமொன்றே அவசியமாகின்றது.

கொள்கைப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளதை பலர் ஆட்சிக்கு வந்ததும் மறந்துவிடுகின்றனர்.இது இன்று நாட்டில் அரசியல் கலாசாரமாக உள்ளது.

பலர் கட்சி மாறுகின்றனர். கொள்கைப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளதனை முற்றாக மாற்றுகின்றார்கள். மக்களால் தெரிவு செய்யடுகின்ற ஆட்சியாளர்களினால் மக்கள் ஏமாற்றப்படுகின்றார்கள்-என்றார்.

# ஹரீன், மனுஷவின் செயல்களை உன்னிப்பாக அவதானிக்கிறோம்

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 27

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஹரீன் பெர்ணாண்டோ, மனுஷ நாணயக்கார ஆகியோரை ஜனாதிபதி தனது ஆலோசகர்களாக நியமித்துள்ளமை குறித்து பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதியின் ஆலோசகர்கள் என்ற அடிப்படையில் தங்களுக்கு கிடைத்த வரப்பிரசாதங்களை அவர்கள் தேர்தல் செயற்பாடுகளுக்காக பயன்படுத்துகின்றனரா என உன்னிப்பாக தேர்தல் ஆணைக்குழு அவதானித்து வருகின்றது என அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதியின் நியமனம் குறித்து பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எனினும் வேட்பாளர் என்ற போதிலும் ஜனாதிபதிக்கு நியமனங்களை மேற்கொள்வதற்கான அதிகாரம் உள்ளது.

எனினும் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர்கள் ஒரு வேட்பாளருக்கு ஆதரவாக செயற்படுவதற்காக வாகனங்கள் போன்ற வரப்பிரசாதங்களை பயன்படுத்தினால் அது தேர்தல் சட்டங்களை மீறும் செயலாகும்.

இதன் காரணமாக அவர்களின் நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# மோ. சைக்கிளுடன் பாலத்துக்குள் வீழ்ந்து இளம் குடும்பஸ்தர் பரிதாபமாக மரணம்!

## நண்பர்கள் இருவர் பொலிஸாரால் கைது

மட்டக்களப்பு, ஓக. 27

மட்டக்களப்பு பழுகாமத்தில் பாலத்தில் இருந்து மோட்டார் சைக்கிளுடன் தவறி வீழ்ந்து இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார். இந்த நிலையில் அவரின் நண்பர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.



களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பழுகாமம் பெரிய போரதீவு பிரதான வீதியில் உள்ள ஆத்துக்கட்டு பாலத்தின் ஊடாக மோட்டார் சைக்கிளில் பயணித்த 3 பேரில் மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் மோட்டார் சைக்கிளுடன் பாலத்தில் இருந்து கீழே தவறி வீழ்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பழுகாமம் பட்டாரபுரத்தைச் சேர்ந்த 39 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஈஸ்வரன் தியாகராஜா என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் நண்பர்கள் இருவருடன் பெரிய போரதீவு பிரதேசத்தை நோக்கிப் பயணித்து கொண்டிருந்த போது ஆத்துக்கட்டு பாலத்தில் மோட்டார் சைக்கிளை நிறுத்த முற்பட்டார். இந்த நிலையில் மோட்டார் சைக்கிளுடன் பாலத்தில் இருந்து கீழே தவறி வீழ்ந்து நீரில் மூழ்கி காணாமல் போனார்.

இதனையடுத்து பொலிஸார், பொதுமக்கள் உதவியுடன் நீரிழ் மூழ்கி உயிரிழந்தவரையும் மோட்டார் சைக்கிளையும் மீட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற கொண்டு வருகின்றனர். (எ)

# தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வு? யார்மீதும் நம்பிக்கை இல்லை

## தென்னிலங்கை வேட்பாளர்களை சாடிய சிறிநேசன்

கல்முனை, ஓக. 27

கல்முனை வடக்கு பிரதேச செயலகம், மேய்ச்சல் தரைப் பிரச்னைகளுக்குத் தீர்வு தராத வேட்பாளர்களா தமிழர்களுக்கு நிரந்தர தீர்வு தரப்போகின்றார்கள்? என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிசேன கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியுள்ள தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் மக்களின் கருத்துக்களை அறியும் கலந்துரையாடல் மட்டக்களப்பு செட்டிபாளையத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமான விடயம் இப்போது படிப்படியாக சூடு பிடித்துக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் தமிழர்கள் பல விதமாக சிந்தித்துக்கொண்டிருக்கின்ற வேளையில் பலவிதமான கேள்விகளும் எங்களை நோக்கி வருகின்றன.

அந்த வகையில் 8 ஆவது ஜனாதிபதித் தேர்தலிலும் நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ சிங்கள வேட்பாளர்களை ஆதரித்து இருக்கின்றோம். முதல் தடவையாக தமிழ்ப் பொது வேட்பாளர் என்கின்ற சிந்தனையை 83 சிவில் சமூக கட்டமைப்புகள் கொண்டு வந்திருக்கின்றன. அவர்கள் தமிழ்ப் பொது வேட்பாளரை களத்தில் இறக்கியிருப்பதோடு மட்டுமல்லாமல் 7 தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து பயணிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி இன்னும் முடிவு எடுக்கவில்லை. என்றாலும் யாரையும் எதிர்க்கின்ற தன்மையை அவர்கள் ஏற்படுத்திக் கொள்ளவில்லை.

யாரை ஆதரிக்க வேண்டும் என்பது சம்பந்தமாக முடிவெடுக்கவில்லையே தவிர யாரையும் எதிர்க்கச் சொல்லி அவர்கள் முடிவு சொல்லவில்லை. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் தேர்தல் பரப்புரைகள் நடைபெறுகின்றன. சாதாரணமான கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரச்னை, மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைப் பிரச்னைகளுக்குத் தீர்வு தராத ஜனாதிபதி வேட்பாளர்கள் தமிழர்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வைத் தரப்போகின்றார்களா? என்றும் சிறிநேசன் கேள்வி எழுப்பினார். (எ)




# வீதியை விட்டு விலகிய கார் விபத்தில் சிக்கியது

திருகோணமலை, ஓக. 27

திருகோணமலையில் இருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த கார் ஒன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் மான்கேணி காட்டுப் பகுதியில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

சாரதி தூங்கியதால் கார் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளா கியுள்ளதாகவும், இந்த விபத்தில் காயமடைந்தோர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)






# சீனன்குடாவில் விமானப்படை சாகசம்

திருகோணமலை, ஓக. 27

திருகோணமலை, சீனன்குடா விமானப்படை கல்விப் பீடத் தால் ஏற்பாடு செய்யப்பட்ட எரோ பேஸ் கண்காட்சி மற்றும் சாகச நிகழ்வுகள் சீனக்குடா விமானப் படை வளாகத்தில் நடைபெற்றன.


கடந்த 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சியில் 2024 கல்வி தொழில்நுட்ப மற்றும் வர்த்தக கண்காட்சியில் இலங்கை அரச பல்கலைக்கழகங்கள், தனியார் பயல்கலைக்கழகங்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் வியாபார மற்றும் தொழில்நுட்பக் கூடாரங்கள், விமானங்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இந்தக் கண்காட்சியில் இலங்கை விமான படையின் விமான சாகசங்கள், விமானப் படை பராசூட் வீரர்களின் சாகசங்கள், விமானப்படை மோப்ப நாய்களின் சாகச நிகழ்வுகள், விமானப்படை மீட்புக் குழுவினரின் விசேட மீட்பு நடவடிக்கை தொடர்பான காட்சிகள் மற்றும் அங்கம்புர மற்றும் தற்காப்புக் கலை காட்சிகள், விமானப்படை அணிவகுப்பு குழுவினரின் விசேட காட்சிகள், சிறுவர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள், இரவு நேர இசை நிகழ்ச்சிகள் போன்ற பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. (எ)










அம்பாறை, வளத்தாப்பிட்டி அருள்மிகு சிறீ பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த சடங்கின் பால்குட பவனி நடைபெற்ற போது... படங்கள்:- வி.ரி.சகாதேவராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத் தளங்களின்மீது ஹிஸ்புல்லா தீவிர தாக்குதல்

## பதிலடி கொடுக்கும் இஸ்ரேல்



ஜெருசலேம், ஒக. 27

**இஸ்ரேலின் இராணுவத் தளங்களை இலக்குவைத்து 300 இற்கும் அதிகமான ரொக்கெட்களை வீசி தாக்குதல்கள் நடத்தப்பட்டிருப்பதாக ஹிஸ்புல்லா அமைப்பு அறிவித்துள்ளது. இதற்குப் பதிலடியாக இஸ்ரேல், தொடர் தாக்குதல்களை நடத்தி வருகிறது.**

லெபனானை தளமாகக் கொண்ட ஹில்புல்லா அமைப்பு, இஸ்ரேல் மீது பெரிய அளவிலான இராணுவத் தாக்குதலை ஞாயிற்றுக்கிழமை மேற்கொண்டது. ஈரான் ஆதரவு அமைப்பான ஹிஸ்புல்லா வெளியிட்டுள்ள அறிக்கையில், இஸ்ரேல் இராணுவத் தளங்களைக் குறிவைத்து 300 இற்கும் அதிகமான ரொக்கெட்கள் வீசி தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஹிஸ்புல்லா அமைப்பு தாக்குதலை தொடுப்பதற்கு முன்பாகவே, லெபனான் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இஸ்ரேலுக்கு எதிராக ஹிஸ்புல்லா போராளிகள் பெரிய அளவில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருப்பதை நாங்கள் முன்கூட்டியே கண்டறிந்தோம். இஸ்ரேலிய மக்கள் மீதான அச்சுறுத்தலை தணிக்கும் விதமாக, இராணுவ விமானங்கள் ஹில்புல்லா அமைப்பினரின் இலக்குகளை நோக்கி நிலைநிறுத்தப்பட்டுள்ளன. மேலும், தெற்கு லெபனானில், வடக்கு மற்றும் மத்திய இஸ்ரேல் பகுதிகளை இலக்காக கொண்ட ஹிஸ்புல்லா அமைப்பினரின் நூற்றுக்கணக்கான ரொக்கெட் ஏவு தளங்களை எங்கள் விமானங்கள் தாக்கி அழித்தன என்று இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. (எ)

# ரஷ்யா மீதான அணுகுமுறைகளை மாற்றினால் போர் முடிவுக்கு வரும்

## இந்தியாவிடம் உக்ரைன் எடுத்துரைப்பு

கீவ், ஒக. 27

ரஷ்யா மீதான அணுகுமுறைகளை இந்தியா மாற்றினால் போர் நிச்சயம் முடிவுக்கு வரும் என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.


கடந்த 2022 பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்ய இராணுவம் தாக்குதலை தொடங்கியது. இந்தப் போரில் உக்ரைனின் 25 சதவீத பகுதிகளை ரஷ்யா கைப்பற்றி, தன்னுடன் இணைத்துக் கொண்டது.

இந்த சூழலில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மரின்ஸ்கி அரண்மனையில் உக்ரைன் ஜனாதிபதியை சந்தித்து பேச்சு நடத்தினார். அப்போது, உக்ரைன் - ரஷ்யா போரை நிறுத்துவது குறித்து அவர்கள் ஆலோசனை நடத்தினர்.

இந்த சந்திப்பு குறித்து ஜெலன்ஸ்கி செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு, இந்தியப் பிரதமர் மோடியுடனான சந்திப்பு வரலாற்று சிறப்புமிக்கது. அந்த சந்திப்பு மிக நன்றாக அமைந்தது. ரஷ்யாவிடமிருந்து இந்தியா கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வது தொடர்பாக எனது கருத்துகளை முன்வைத்தேன். ரஷ்யாவிலிருந்து எண்ணெய் இறக்குமதியை பல உலக நாடுகளும் நிறுத்திவிட்டன. இந்தியா தொடர்ந்து ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்கிறது. இதனை இந்தியா நிறுத்தினால் புடின் மிகப்பெரிய சவால்களை எதிர்கொள்ள நேரிடும். புடினுடைய பொருளாதாரம் ஆயுதம் சார்ந்தது. அவருடைய கரங்களை இந்தியா, சீனா எண்ணெய் இறக்குமதி வலுவாக்கின்றன. அந்த வகையில் ரஷ்ய ஆயுதப்படையை பலப்படுத்துவதை இந்தியா நிறுத்த வேண்டும்.

இந்தியா நினைப்பதுபோல் புடின் இந்தியாவை மதிக்கவில்லை. அவ்வாறு மரியாதை கொண்டிருந்தால் மோடி இங்கு வந்துள்ள நிலையில் உக்ரைன் மருத்துவமனையை ரஷ்ய படைகள் தகர்த்திருக்காது.

இந்தியா எங்களின் பக்கம் நிற்கவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். நடுவுநிலை காப்பதை நாங்கள் விரும்பவில்லை. இந்தியாவின், இந்தியர்களின் அணுமுறை மாறினால் ரஷ்ய போர் நிச்சயம் முடிவுக்கு வரும். இந்தியாவுக்கு மிகப்பெரிய செல்வாக்கு இருக்கிறது. இந்தியா நினைத்தால் போர் முடிவுக்கு வரும்- என்றார். (எ)



# 320 ஏவுகணைகளை வீசி தாக்குதல் இஸ்ரேலில் அவசரநிலை அறிவிப்பு

டெல் அவிவ், ஒக. 27

இஸ்ரேலின் வடக்கு, மத்திய பகுதிகளை இலக்குவைத்து ஹிஸ்புல்லா போராளிகள் 320 ஏவுகணைகளை சரமாரியாக வீசியது. 20இற்கும் மேற்பட்ட ட்ரோன்கள் மூலம் இஸ்ரேல் பகுதிகள் மீது குண்டுகளும் வீசப்பட்டன. இதனையடுத்து, இஸ்ரேலில் அவசரநிலை அமுல்படுத்தப்பட்டது.

லெபனான் நாட்டின் பிரதான அரசியல்கட்சியாகவும், துணை இராணுவப் படையாகவும் ஹிஸ்புல்லா செயல்படுகிறது. அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஹிஸ்புல்லாவை தீவிரவாத அமைப்பாக அறிவித்துள்ளன. ஈரானின் ஆதரவுடன் செயல்படும் ஹிஸ்புல்லா அமைப்புக்கும், இஸ்ரேல் இராணுவத்துக்கும் இடையே மோதல் நீடித்து வருகிறது.

இந்தச் சூழலில் ஷியா முஸ்லிம்களின் அர்பாயின் தினத்தை யொட்டி இஸ்ரேலின் வடக்கு, மத்திய பகுதிகளை இலக்கு வைத்து ஹிஸ்புல்லா போராளிகள் 320 ஏவுகணைகளை அடுத்தடுத்து வீசினர். 20இற்கும் மேற்பட்ட ட்ரோன்கள் மூலம் இஸ்ரேல் பகுதிகள் மீது சரமாரியாக குண்டுகளும் வீசப்பட்டன.

இந்த நிலையில், “நாட்டை பாதுகாக்க எந்த எல்லைக்கும் செல்வோம். இஸ்ரேலுக்கு எதிராக செயல்படுபவர்களுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும். இந்த கதை இத்தோடு முடியாது. தொடரும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரித்துள்ளார்.

# ஜேர்மனியில் கத்திக்குத்து மூவர் கொலை

பேர்லின், ஒக. 27

ஜேர்மனியில் கத்திக்குத்து தாக்குதலில் ஈடுபட்டு மூவரை கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் சிரியாவை சேர்ந்த 26 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் தானாக முன் வந்து சரணடைந்தார் என பொலிஸார் கூறினர்.

இந்த தாக்குதலுக்கு ஐ. எஸ். அமைப்பு உரிமை கோரியுள்ளது.

சந்தேகநபர் சொலிங்ஜெனில் உள்ள அகதிகளுக்கான முகாமை சேர்ந்தவர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவரின் ஆடைகளில் இரத்தக்கறை காணப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

# குரங்கம்மை நோய் அறிகுறி இதுவரை யாருக்கும் இல்லை

சென்னை, ஒக. 27

வெளிநாடுகளில் இருந்து தமிழகம் வந்த யாருக்கும் குரங்கம்மை நோய் அறிகுறிகள் இல்லை என்று பொதுச் சுகாதாரத் துறை இயக்குநர் செல்வவிநாயகம் தெரிவித்தார்.

காய்ச்சல், தலைவலி, உடல் வலி மற்றும் தடிப்புகள் போன்றவை அந்தத் தொற்றுக்கான அறிகுறிகளாகும்.

ஆபிரிக்காவில் உள்ள கொங்கோ நாட்டில் வேகமாக பரவி வரும் குரங்கம்மை தொற்றைக் கருத்தில் கொண்டு பொதுச் சுகாதார அவசர நிலையை கடந்த 14ஆம் திகதி உலக சுகாதார நிறுவனம் அறிவித்தது. இந்த நிலையில், இந்திய சுகாதார அமைச்சு இது தொடர்பில் தொடர்ந்து கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. (எ)

# படகு கவிழ்ந்து விபத்து 13 அகதிகள் உயிரிழப்பு

சனா, ஒக. 27

ஏமன் கடற்கரை அருகே அகதிகள் பயணித்த படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 13 பேர் உயிரிழந்தனர்.

எதியோப்பியாவில் இருந்து அகதிகளை ஏற்றி வந்த படகு ஒன்று ஏமன் கடற்கரை அருகே எதிர்பாராத விதமாக கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. அந்தப் படகில் மொத்தம் 27 பேர் பயணம் செய்ததாக கூறப்படும் நிலையில், 13 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. மேலும் 14 பேர் மாயமான நிலையில், அவர்களைத் தேடும் பணி நடைபெற்று வருவதாக ஐ. நா. புலம்பெயர்வு அமைப்பு தெரிவித்துள்ளது. (எ)

# பயங்கரவாத தாக்குதலால் பர்கினோவில் 200 பேர் பலி

ஒவ்கடங்கு, ஒக. 27

பர்கினோ பசோவில் இடம் பெற்ற பயங்கரவாதத் தாக்குதலில் 200 பேர் உயிரிழந்தனர்.

மேற்கு ஆபிரிக்காவில் உள்ள நாடுகளில் ஒன்று பர்கினோ பசோ. நைஜீரியா, மாலி போன்ற நாடுகளை எல்லைகளாக கொண்டுள்ள இந்த நாட்டில் கடந்த செப்ரெம்பர் மாதம் இராணுவம் ஆட்சியை கைப்பற்றியது. அதேவேளை அந்த நாட்டில் அல்கொய்தா, ஐ. எஸ். போன்ற பயங்கரவாத அமைப்புகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

இந்த நிலையில், பர்கினோ பசோவின் பர்சலொகொ மாகாணம் கயன் நகருக்குள் புகுந்த பயங்கரவாதிகள் அங்கிருந்த மக்கள் மீது சரமாரியாக துப்பாக்கிச் சூடு தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 200 பேர் உயிரிழந்தனர். மேலும், 140 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு அல்கொய்தா பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. (எ)

# மழை, வெள்ளப்பெருக்கில் சிக்கி இந்தோனேசியாவில் 11 பேர் பலி

ஜகார்தா, ஒக. 27

இந்தோனேசியாவில் மழைக் காலங்களில் அடிக்கடி நிலச்சரிவு மற்றும் திடீர் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது.

அங்கு வடக்கு மலுகு மாகாணம், டெர்னேட் தீவில் கன மழை பெய்து வருகிறது. இதனால் நேற்றுத் திடீர் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. ருவா கிராமத்தில் ... வெள்ளம் அடித்துச் சென்றது ... பிரதான வீதிகள் மற்றும் அந்தக் கிராமத்துக்கான தரைவழி தொடர்பு துண்டிக்கப்பட்டது. பல வீடுகள் மற்றும் கட்டடங்கள் சேற்றில் புதைந்தன. திடீர் வெள்ளப்பெருக்கில் சிக்கி 11 பேர் உயிரிழந்தனர். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சமூக ஊடகங்களின் வாயிலாக கருத்துக்கணிப்புகளுக்கு தடை!

## தேர்தல்கள் ஆணைக்குழு கவனம்

கொழும்பு, ஓக. 27

**ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சமூக ஊடகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் கருத்துக் கணிப்புக்களுக்கு தடை விதிக்க திட்டமிடப்பட்டுள்ளது.**

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சமூக ஊடகங்களின் வாயிலாக மேற்கொள்ளப்படும் கருத்துக் கணிப்புக்களுக்கு தடை விதிப்பது குறித்து கவனம் தேசிய தேர்தல் ஆணைக்குழு கவனம் செலுத்தி வருகிறது.

இந்த விடயம் தொடர்பில் இந்த வாரம் நடைபெறவுள்ள தேர்தல் ஆணைக்குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட உள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த கருத்துக் கணிப்புக்கள் மூலம் சில வேட்பாளர்களுக்கு பாதக நிலைமை ஏற்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ள அவர், இதனை மேற்கொள்ளும் தரப்புக்கள் யார் என்பது குறித்து கண்டறியும் நோக்கில் தேர்தல் ஆணைக்குழு ஆய்வு நடத்தி வருவதாகத் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் அடிப்படையில் கருத்துக் கணிப்புக்களை தடை செய்வதற்கான வழிமுறைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலத்திரனியல் அல்லது அச்சு ஊடகங்களில் நடத்தப்படும் கருத்துக் கணிப்புக்களை இரத்து செய்வது இலகுவானது என்ற போதிலும், சமூக ஊடகங்களில் மேற்கொள்ளப்படும் கருத்துக் கணிப்புக்களை கட்டுப்படுத்துவது சவால் மிக்கது என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் கூறினார்.

(அ)

# ஜனாதிபதி தேர்தல் குறித்த முறைப்பாடுகள் அதிகரிப்பு

## ஜூலை 31 ஆம் திகதி முதல் இதுவரை 925 முறைப்பாடுகள்

கொழும்பு, ஓக. 27

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்து வருவதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக, தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. கடந்த ஜூலை 31 ஆம் திகதி முதல் தற்போது வரை மொத்தம் 925 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சுமார் 250 முறைப்பாடுகள் பவ்ரல் அமைப்புக்கு கிடைத்துள்ளதாக தெரிவித்த அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர், இந்த நிலைமை எதிர்காலத்தில் அதிகரிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

(அ)

# பொதுமக்கள் பொழுதுபோக்கு மையம் கிளிநொச்சி டிப்போச் சந்தியில் திறப்பு

## இலவச இணைய வசதிகள் இணைப்பு

கிளிநொச்சி, ஓக. 27

கிளிநொச்சி டிப்போ சந்தியில், பொது மக்கள் பொழுது போக்கு மையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி டிப்போ சந்தியிலுள்ள இராணுவ நினைவுத்தூபி அமைந்துள்ள வளாகத்தில் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகேயால் குறித்த பூங்கா திறந்து வைக்கப்பட்டது.

இலவச இணைய வசதிகளுடன் கூடிய குறித்த பூங்காவில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கையை மேற்கொள்வதற்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ் மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளை அதிகாரி, இராணுவ உயரதிகாரிகள், பொது மக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

(அ)

# வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் சுமார் 5,000 பேருக்கு எலிக் காய்ச்சல்!

கொழும்பு, ஓக. 27

மழையுடனான காலநிலையால் வாந்தி, வயிற்றுப்போக்கு, காய்ச்சல் போன்ற நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் நாட்டில் சுமார் 5 ஆயிரம் எலிக்காய்ச்சல் நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழையுடனான காலநிலை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக வாந்தி, வயிற்றுப்போக்கு, காய்ச்சல் போன்ற நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி, காலி, கேகாலை, மாத்தறை, களுத்துறை, மொனராகலை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் அதிக ஆபத்து உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக வெள்ளம் ஏற்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள் உரிய சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிப்பது அவசியமாகும் என சுகாதார பிரிவினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நாட்களில் தசை வலி, தலைவலி, காய்ச்சல் மற்றும் வாந்தி போன்ற அறிகுறிகள் இருந்தால், முறையான மருத்துவ ஆலோசனையைப் பெறுவது கட்டாயம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# தபால்மூல வாக்குச் சீட்டு அடங்கிய பொதிகளை ஏற்கும் பணி ஆரம்பம்

கொழும்பு, ஓக. 27

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தபால் மூல வாக்காளர்களுக்கான தபால் மூல வாக்குச் சீட்டுகள் அடங்கிய பாதுகாக்கப்பட்ட பொதிகளை ஏற்றுக் கொள்ளும் பணி நேற்று ஆரம்பமானது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தபால் மூல வாக்களர்களுக்கு முகவரியிடப்பட்ட பதிவு செய்யப்பட்ட தபால் மூல வாக்குச் சீட்டுகள் அடங்கிய பாதுகாக்கப்பட்ட பொதிகளை ஏற்றுக்கொள்ளும் பணி நேற்று ஆரம்பமாகியுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், வாக்காளர் அட்டை விநியோகம் செப்ரெம்பர் 3 ஆம் திகதி ஆரம்பமாகும் நிலையில் செப்ரெம்பர் 8 ஆம் திகதி அதற்கான சிறப்பு நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகள் காரணமாக ஜனாதிபதி தேர்தல் முடியும் வரை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தபால் திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களின் விடுமுறையும் இரத்து செய்யப்படுவதாக பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்தார்.

எவரேனும் அத்தியாவசிய காரணங்களுக்காக விடுமுறை எடுக்க வேண்டுமாயின், மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதி தபால் மா அதிபரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் பிரதி தபால் மாஅதிபர் ராஜித ரணசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

(அ)

# சஜித்துக்கு ஒருமுறை வாய்ப்பு அளிக்கலாம்

## இராதாகிருஷ்ணன் எம்.பி கூறுகிறார்

கொழும்பு, ஓக. 27

புத்தியுள்ள மனிதரெல்லாம் வெற்றியாளரல்ல என்பதற்கு உதாரணம் ரணில் விக்கிரமசிங்கவே என பாராளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஒருமுறை வாய்ப்பு கொடுத்து பார்க்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

நுவரெலியா மாவட்டம் ராகலை நகரில், ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து மலையக மக்கள் முன்னணி மக்கள் சந்திப்பை நடத்தியது.

இதன்போதே வே.இராதாகிருஷ்ணன் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது கட்சி முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

# வன்னி தபால் மூல வாக்களிப்பு; 228 விண்ணப்பங்கள் நிராகரிப்பு

வவுனியா, ஓக. 27

ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூல வாக்களிப்புக்காக வன்னி தேர்தல் தொகுதியில் விண்ணப்பித்த 13 ஆயிரத்து 389 அரச உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களில் 228 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.ஏ.சரத் சந்திர தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ் விடயத்தை தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காக வவுனியா மாவட்டத்தில் 1 இலட்சத்து 28 ஆயிரத்து 585 பேரும், மன்னார் மாவட்டத்தில் 9 இலட்சத்து 607 பேரும், முல்லைதீவு மாவட்டத்தில் 86 ஆயிரத்து 889 வாக்காளர் பேரும் என வன்னி தேர்தல் தொகுதியில் வாக்களிக்க 3 இலட்சத்து 6 ஆயிரத்து 81 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை, 387 வாக்களிப்பு நிலையங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தபால் மூல வாக்குகளை எண்ணும் பணிக்காக 10 நிலையங்களும், ஏனைய வாக்குகளை எண்ணும் பணிக்காக 27 நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

# கனகராயனாற்று பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு

கிளிநொச்சி, ஓக. 27

கிளிநொச்சி பெரியகுளம் கனகராயனாற்றுப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்திற்குட்பட்ட பெரியகுளம் கனகராயனாற்றுப் பகுதியில் பல ஏக்கர் காணிகளில் பொலிஸாரின் முழுமையான ஒத்துழைப்போடு சட்டவிரோத மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனகராயன் ஆற்றினை அண்டிய பெரியகுளம் பகுதியிலும் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலும் சுமார் 25 அடி ஆழத்துக்கும் மேலாக அதிக அளவில் கனரக வாகனங்கள் மூலம் மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் தொடர்ந்து மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுவதாக பொது மக்கள் முறைப்பாடுகளை தெரிவித்து வருகின்றனர்.

மணல் அகழ்வு தொடர்பாக பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட அரச அதிபர் ஆகியோரால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட போதும் இதுவரை குறித்த மணல் அகழ்வை கட்டுப்படுத்த பொலிசார் எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மணல் அகழ்வு மேற்கொள்ளப்படும் பகுதிகளை, கிளிநொச்சி மாவட்ட பதில் அரச அதிபர் எஸ்.முரளிதரன் மற்றும் பிரதேச பிரதேச செயலாளர் ரீ.பிருந்தாகரன் ஆகியோர் நேரடியாக சென்று பார்வையிட்டனர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்துவதாகவும் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்குவில்...

தனது மகனை தனியார் கல்வி நிலையத்திலிருந்து அழைத்து வந்துள்ளார். அப்போது, பிறவுன் வீதியில் ஓட்டோவுடன் மோதுண்டதில் இவர் படுகாயமடைந்தார்.

யாழ். போதனா மருத்துவமனையில் உடனடியாக சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி நேற்று திங்கட்கிழமை அதிகாலை உயிரிழந்தார்.

காரைநகரை சேர்ந்த இவர் நெருக்கடி நிறைந்த போர் காலத்தில் செய்தியாளராகவும் பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழரின்...

தெரிவித்தார்.

அவரின் உரையில்,

"நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்கு பதிலாக மாற்று முறைமை செயல்படுத்தப்படும். அனைத்து மக்களுக்கும் சார்பான வகையில் புதிய அரசமைப்பை உருவாக்குவோம். புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக 2015 -2019 வரையான காலப்பகுதியில் முன்னெடுத்த செயல்பாடுகளை முடிவுறுத்தி, அனைத்து இன மக்களின் உரிமைகளையும் அங்கீகரிக்கும் வகையிலான புதிய அரசமைப்பை உருவாக்குவோம். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற சட்டவாட்சி கோட்பாட்டை செயல் வடிவில் நடைமுறைப்படுத்து வோம்.

தமிழர்களின் மொழி உரிமையை அரச நிர்வாகத்தின் ஊடாக உறுதிப்படுத்துவோம். அரச நிர்வாகத்தில் தமிழர் ஒருவர் தமிழ் மொழியில் கேள்வி எழுப்பும் போது அவருக்கு தமிழ் மொழியில் பதிலளிப்பதை கட்டாயமாக்குவோம்.

பாடசாலை கல்வி கட்டமைப்பை மறுசீரமைப்போம். உணவு, கல்வி, சுகாதாரம் என்பவற்றுக்கான வற் வரியை நீக்குவோம் - என்றும் கூறினார். (ஐ)

# அரச ஓய்வூதியம் பெறாதோருக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம்!

கொழும்பு, ஒக. 27

அரச ஓய்வூதியம் பெறாதவர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை சமூக பாதுகாப்பு சபை ஆரம்பித்துள்ளது.

இதன் பிரகாரம், ஒருவர் தமது சபையில் அங்கத்தவரானதன் பின்னர் அவருக்கான ஓய்வூதியம் தயாரிக்கப்படும் என அந்த சபையின் பொது முகாமையாளர் கே. ஏ. எஸ். பிரசன்ன களு ஆராச்சி தெரிவித்துள்ளார்.

இதன்படி, எதிர்வரும் காலங்களில் அரச ஓய்வூதியம் பெறாதவர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியம் வழங்கும் நோக்கில் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை 011-2886 088 அல்லது 076-095-4002 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என சமூக பாதுகாப்பு சபையின் பொது முகாமையாளர் கே. ஏ. எஸ். பிரசன்ன களு ஆராச்சி அறிவித்துள்ளார். (ஐ)

## ஐ.நா....

பாதுகாப்பு முறையை சீர்திருத்துவதாக உறுதியளித்த போதிலும் இலங்கை அரசாங்கம் அதனை இன்னமும் செய்யவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

அத்துடன், 2023 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டங்கள் மற்றும் தீர்மானங்கள் மூலம் படைகளுக்கு பரந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் கருத்து சுதந்திரம் மற்றும் கருத்து வெளிப்படுத்தல் மீதான கட்டுப்பாடுகளையும் இலங்கை அரசாங்கம் விரிவுபடுத்தியுள்ளதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

இந்த நிலையிலேயே ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளரின் குற்றச்சாட்டுகளை அரசாங்கம் மறுத்துள்ளது. அத்துடன், ஜெனிவாவில் இது தொடர்பில் உலக நாடுகளின் தூதுவர்ளுக்கு விளக்கம் ஒன்றையும் இலங்கை வழங்கியுள்ளது. (ஐ)

## சீனாவின்...

எஸ். மும்பை கொழும்பு துறை முகத்தை வந்தடைந்த நிலையில் சீனாவின் இந்த மூன்று கப்பல்களும் கொழும்பை வந்தடைந்தன.

ஹீ பெய், வூசிஷான், ஹைலியான்ஷான் என்று பெயரிடப்பட்ட கப்பல்களே நேற்று கொழும்பை வந்தடைந்தன. ஹீ பெய் கப்பலில் 267 கடற்படையினர் மற்றும் உதவியாளர்களும் வூசிஷான் கப்பலில் 872 பேரும் ஹைலியானஷான் கப்பலில் 334 பேரும் வருகை தந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு வந்த மூன்று போர் கப்பல்களையும் கடற்படை சம்பிரதாயபூர்வமாக வரவேற்றது. 3 நாள் பயிற்சியின் பின்னர் இந்தக் கப்பல்கள் சீனா திரும்பும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தென்னிலங்கை...

மேலும், தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புடன் பேசுவதற்கு தென்னிலங்கை வேட்பாளர்கள் அழைப்பு விடுத்தால் அந்த அழைப்புகளை ஏற்பது என்றால் ஒட்டுமொத்த கட்டமைப்பாக அதனை ஏற்று பேச்சில் பங்கேற்பது.

இதேபோன்று, ஏற்பதில்லை என்றால் ஒட்டுமொத்தக் கட்டமைப்பாக அந்த அழைப்பை ஏற்காமல் விடுவது - அதற்கு பொருத்தமான பதிலை வழங்குவது. அத்துடன், ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரையிலும் இந்த நிலைப்பாட்டை பேணுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

முன்னதாக நேற்றுமுன்தினம் வவுனியாவில் கூடிய தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் கட்சிகள் "எதிர்காலத்தில் காத்திரமான பேச்சுக்கு தென்னிலங்கை வேட்பாளர்கள் வருவார்களாக இருந்தால் அது தொடர்பில் நாம் கூடி ஆராய்ந்து முடிவுகளை எடுப்போம்", என்று தெரிவித்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ)

## தகராறில்...

இடையே முரண்பாடு இருந்து வந்துள்ளது. இந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு மதுபோதையில் வந்த கணவன் அவருடன் முரண்பட்டுள்ளார். இதைத் தொடர்ந்து, மனைவி அபயக் குரல் எழுப்பியுள்ளார்.

இவர்களின் வீட்டின் அருகே வசித்து வந்த பெண்ணின் சகோதரன் உடனடியாக அங்கு உதவிக்கு ஓடியுள்ளார். அப்போது, அவரின் சகோதரி தீயில் எரிந்துகொண்டிருந்தார். அயலவர்களின் உதவியுடன் அவரை மீட்டு அச்சுவேலி பிரதேச மருத்துவமனையில் சேர்த்தனர். படுகாயமடைந்த பெண் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இதனிடையே, அங்கிருந்தவர்களால் தாக்கப்பட்ட பெண்ணின் கணவரும் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தனது தங்கையை கணவரே தீயிட்டு எரித்தார் என்று பெண்ணின் சகோதரன் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

## சுவிஸிலிருந்து...

வவுனியா வடக்கு சின்னடம்பன் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் செல்லத்துரை விமலநாதன் (வயது 66) என்பவரே கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்ட நபர் தனது வீட்டில் உறவினர் ஒருவருடன் சேர்ந்து மது அருந்தியுள்ளார். இதன்போது இருவருக்கும் இடையே தர்க்கம் ஏற்பட்டு அது கைகலப்பாக மாறியுள்ளது. அந்தச் சமயம் சுவிஸிலிருந்து வந்தவரை அவரின் உறவினர் இரும்புக் கம்பியால் தாக்கியுள்ளார். இதில், அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச்சம்பவம் தொடர்பில் 60 வயதான சந்தேகநபரை கனகராயன் குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## பெண்களுக்கு...

- கந்தளாய் - சேருவிலவில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நாட்டை வங்குரோத்து அடையச் செய்த - தற்போதைய அரசாங்கத்தில் உள்ள தலைவர்களின் விவேகமற்ற - அக்கறையில்லாத கொள்கைகளால் இலட்சக்கணக்கானோர் வறுமைக்கு உள்ளாகியுள்ளனர். அவர்கள் வறுமையில் சிக்கி எல்லையற்ற அளவில் அசாதாரண நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

வாழ வழிகளின்றி - தெளிவான வருமான வரிகளின்றி - ஒவ்வொரு நாளும் மூன்று வேளை உணவையும் பெற்றுக் கொள்ள முடியாத வறிய மக்களுக்காக ஜனசவிய, சமுர்த்தி, அஸ்வெசும மற்றும் கெமிதிரிய ஆகிய செயல்திட்டங்களில் உள்ள சிறந்த விடயங்களை ஒன்றாக சேர்த்து - குறைபாடுகளை நீக்கி சிறந்த திட்டம் ஒன்றை முன்னெடுப்போம்.

உணவுத் தேவை, உணவுத் தேவை அல்லாத வேறு தேவைகள், சேமிப்பு, நுகர்வு, முதலீடு, உற்பத்தி மற்றும் ஏற்றுமதி போன்ற விடயங்களை கருத்தில் கொண்டும், வறுமை ஒழிப்பு திட்டத்தின் ஊடாக மாதாந்தம் 20 ஆயிரம் ரூபாய் வழங்கி, 24 மாதங்களில் வறுமையை ஒழிக்கும் தேசிய செயல் திட்டத்தை முன்னெடுப்போம்.

இந்த 20 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படுகின்றபோது 24 மாதங்களில் வறுமையை ஒழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். வீட்டிலுள்ள பெண்களுக்கு இந்த சலுகையைப் பெற்றுக் கொடுத்து வறுமையை ஒழிப்போம் - என்றார். (ஐ)

## அபிவிருத்தி...

பின்னரே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தேர்தல் காலத்தில் சலுகைகள், தனிப்பட்ட இலாபத்துக்காக தவளைகளைப்போல் பாய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். குறுகிய தேவைகளுக்காகக் கட்சித் தாவல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக உயர் நீதிமன்றம் அண்மைக்காலங்களில் வழங்கியுள்ள தீர்ப்புகளை வரவேற்கிறேன்.

அரசியல்வாதிகள் எம்மை விட்டுச் சென்றாலும் மக்கள் எம்முடன் உள்ளார்கள் என்பதை எமது முதலாவது பிரசாரக்கூட்டத்தில் உறுதிப்படுத்தியுள்ளோம். அடிமட்ட மக்களின் ஆதரவுடன் மீண்டும் ஆட்சியை கைப்பற்றுவோம்.

நபர்களை அடிப்படையாகக் கொண்டு நாங்கள் அரசியலில் ஈடுபடவில்லை. கொள்கைகளை முன்னிலைப்படுத்தி செயல்படுகிறோம். நாட்டைப் பிளவுபடுத்தும் செயல்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. தேர்தல் வெற்றிக்காகப் பொய்யான வாக்குறுதிகளை எந்தத் தரப்பினருக்கும் வழங்கப் போவதில்லை. அபிவிருத்தித் திட்டங்களில் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் கிடையாது - என்றும் கூறினார். (ஐ)

## வடக்கு, கிழக்கில் ...

விஞ்ஞாபனத்தை "வளமான நாடு - அழகான வாழ்க்கை" எனும் தொனிப் பொருளில் நேற்று திங்கட்கிழமை கொழும்பில் வெளியிட்டார். அதில் தெரிவிக்கப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு,

இனவாதம் மற்றும் மதத் தீவிரவாதத்தால் இடம்பெற்றுள்ள வன்முறை சம்பவங்களை புலன்விசாரணை செய்வதற்கான உண்மை மற்றும் மீளிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் செயல்பாடு விரிவாக்கப்படும்.

மதங்களிடையேயான மோதல்களை தவிர்க்க மதத் தலைவர்கள், கல்விமான்கள் இணைந்த சர்வமதப் பேரவை நிறுவப்படும். தேசிய மற்றும் மத ஐக்கியத்துக்கான கலாசார நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளை தேசிய, மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் ஏற்படுத்தப்படும்.

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதுடன், அவர்கள் சுதந்திரமாக சமூகமயமாதலை உறுதிப்படுத்துவோம். பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் உள்ளிட்ட அடக்குமுறைசார் அனைத்து சட்டங்களையும் ஒழித்து அனைத்து மக்களினதும் சுதந்திரம் உறுதி செய்யப்படும்.

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் சகல பிரதேசங்களிலும் மக்களின் சிவில் உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையிலான சிவில் நிர்வாகம் முறைமைப்படுத்தப்படும்.

போரில் விதவைகளானோர், அநாதைகள் மனஅழுத்தங்களுக்கு உள்ளானவர்களுக்கு மானிய உதவிகள் வழங்கப்படும். இனக் கட்டமைப்பை மாற்றியமைக்கும் குறிக்கோளுடன் மேற்கொள்ளப்படும் மக்கள் குடியேற்றங்களை நிறுத்துதல். காணிகள் மற்றும் வாழ்விடங்கள் பற்றிய தேசிய ஆணைக்குழு ஒன்றின் ஊடாக நிலவும் பிரச்னைகளுக்கு தீர்வு காணப்படும்.

அரசமைப்பின் 16ஆவது திருத்தத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய மொழிக் கொள்கையை அவசியமான வளங்கள் மற்றும் தொழில்நுட்ப வசதிகளைப் பெற்றுக் கொடுத்து நடைமுறைப்படுத்தப்படும்.

அனைத்துப் பிரஜைகளும் தமது மொழியில் சேவைகளை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையிலான தேசிய மொழிக் கொள்கை அமுலாகும். தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் கூடுதலாக வாழ்கின்ற வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பொலிஸ் நிலையங்கள், அரச பணிமனை போன்ற சிவில் சேவைகள் நிலவும் இடங்களில் தமிழ் மொழியில் பணிகளை ஆற்றக்கூடிய உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் மற்றும் மொழிபெயர்ப்பாளர்கள் நியமிக்கப்படுவர்.

மலையகத் தமிழ் மக்களின் அடையாளத்தையும் உரிமைகளையும் ஏற்றுக்கொண்டு அவர்களின் காணி, வீடமைப்பு, கல்வி, சுகாதாரம் போன்ற வசதிகளை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.


மலையக தமிழ் சமுதாயத்தின் சம்பளத்தை வாழ்க்கை செலவுக்கு ஏற்றவகையில் அதிகரித்தல். மக்கள் கௌரவமான வருமானத்தை பெறுவதற்குள்ள உரிமையை உறுதிப்படுத்துதல்.

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களின் கடற்றொழில் நடவடிக்கைகளில் வெளிநாட்டு மீனவர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள சவால்களை இராஜதந்திர ரீதியாக தீர்த்து, அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளையும் விற்பனை வசதிகளுக்கான வாய்ப்புகள் உருவாக்கப்படும் - என்று கூறப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இந்திய போர்க் கப்பல் கொழும்புதுறைமுகத்தில்



கொழும்பு, ஓக. 27

இந்திய கடற்படையின் முன்னரங்க போர்க்கப்ப லான ஐ.என்.எஸ். மும்பை மூன்று நாள் விஜயமாக நேற்றுக் காலை கொழும்புதுறைமுகத்தை வந்தடைந் தது.

இக்கப்பலுக்கு இலங்கை கடற்படையினரால் சம் பிரதாயபூர்வமான வரவேற்பு வழங்கப்பட்டது. இந்தி யாவில் தயாரிக்கப்பட்ட டெல்லி ரகத்தைச் சேர்ந்த நாசகாரி கப்பல்களில் மூன்றாவது கப்பல் ஐ.என்.எஸ் மும்பை ஆகும்.

மஸ்கன் டொக் லிமிடெட் நிறுவனத்தால் தயாரிக்கப் பட்ட இக்கப்பலுக்கு மும்பை நகரின் பெயரை அடிப் படையாகக் கொண்டு பெயர் சூட்டப்பட்டது.

இக்கப்பல் அதன் தரமுயர்த்தல் பணிகளின் பின்னர் 2023ஆம் ஆண்டு டிசெம்பர் 8ஆம் திகதி விசாகபட்டி னத்தில் உள்ள கிழக்கு பிராந்திய கடற்படை கட்டளைப் பிரிவிடம் சேவையில் இணைக்கப்பட்டது.

கொழும்பில் ஐ.என்.எஸ் மும்பை தரித்து நிற்கும் காலத்தில் இருகடற்படையினரதும் சிறந்த நடை முறைகளை பகிர்ந்து கொள்ளும் இலக்குடன் இலங்கை கடற்படை அதிகாரிகள் இக்கப்பலுக்கு விஜயம் செய்து அனுபவப் பகிர்வு செயற்பாடுகளில் ஈடுபட உள்ளனர். (அ)

## விருந்துபசார நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற யுவதி திடீர் மரணம்!

கொழும்பு, ஓக. 27

வரக்காபொல - அம்பேபுஸ்ஸ பகுதியில் திடீர் சுக வீனம் காரணமாக யுவதியொருவர் நேற்று முன் தினம் உயிரிழந்தார்.

நிட்டம்புவ பகுதியிலுள்ள தனியார் வங்கியொன் றில் பணி புரிந்துவந்த குறித்த யுவதி தனது சக ஊழியர் களுடன் விருந்துபசார நிகழ்வொன்றுக்கு சென்றுள் ளார். பின்னர் இரவு 8.30 மணியளவில் வீடு திரும்பிய யுவதி திடீர் சுகவீனமடைந்த நிலையில் வரக்காபொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இதனை யடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட யுவதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக வரக்காபொல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தில் வரக்காபொல - அம்பேபுஸ்ஸ பகுதி யைச் சேர்ந்த 21 வயதுடைய யுவதி ஒருவரே உயிரி ழந்தார் என முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. (அ)

## காலி சிறையில் கைதி உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 27

காலி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் திடீரென சுகயீனமுற்று உயிரிழந்தார் என காலி பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த கைதியொ ருவரே உயிரிழந்துள்ளார்.

இவர் கலவரம் ஒன்று தொடர்பில் கைது செய்யப் பட்டு பலப்பிட்டிய நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் நீதிமன்ற உத்தரவின் கீழ் காலி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித் தனர்.

உயிரிழந்தவரது சடலம் பிரேதப் பரிசோதனைக்காக காலி, கராப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட் டுள்ளது. (அ)

# புத்திசாலித்தனமான - துணிச்சலான தலைவருக்கு வாக்களிக்கவேண்டும்

## கத்தோலிக்க ஆயர் பேரவை வேண்டுகோள்

கொழும்பு, ஓக. 27

**புத்திசாலித்தனமான துணிச்சலான தலைவருக்கு மக்கள் வாக்களிக்கவேண்டும் என கத்தோலிக்க ஆயர் பேரவை வேண்டு கோள் விடுத்துள்ளது.**

நீண்ட காலமாக எதிர்பார்க்கப் படும் அமைப்பு முறை மாற்றத்தை கொண்டுவரக்கூடிய , ஊழலை ஒழிக்கக்கூடிய,புதிய கலாசாரத்தை அறிமுகப்படுத்தக்கூடிய புத்திசா லித்தனமான துணிச்சலான தலை வரை பொதுமக்கள் தெரிவு செய்ய வேண்டும் என கத்தோலிக்க ஆயர் பேரவை தனது வேண்டுகோளில் வலியுறுத்தியுள்ளது.

மக்களின் நலன் மற்றும் நாட் டின் வளர்ச்சியை பணயம் வைத்து தங்களின் சுயநலன்களுக்காகவும், தங்களின் நிகழ்ச்சி நிரலுக்காகவும், அதிகாரம் மற்றும் பதவிகளுக்காக வும் மக்களை தூண்டும், அரசியல் கலாசாரத்தை மாற்றவேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்படவேண் டும் எனவும் கத்தோலிக்க ஆயர் பேரவை கூறியுள்ளது.

நீண்ட காலமாக எதிர்பார்க்கப் படும்,ஊழலையும் அதன் தீமை களையும், இல்லாதொழிப்பதற்கு தேசத்துக்கு புத்திசாலித்தனமான துணிச்சலான தலைவர் தேவை எனவும் அது வலியுறுத்தியுள்ளது. (அ)

# 9 வேட்பாளர்கள் இதுவரை பிரசாரம் ஆரம்பிக்கவில்லை

கொழும்பு, ஓக. 27

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் 39 வேட்பாளர்களில் 19 வேட்பாளர்கள் இதுவரை எவ்வித பிரசார நடவடிக்கைகளையும் ஆரம்பிக்க வில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகள் நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜ நாயக்க இதனை தெரிவித்தார்.

குறித்த வேட்பாளர்கள் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஒரு கூட்டத்தை கூட நடத்தவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலின்போது வேட்பாளர் ஒருவ ருக்கு வாக்குச் சீட்டு அச்சடித்தல் உள்ளிட்ட தேவைக ளுக்கான தேர்தல்கள் ஆணைக்குழு சுமார் ஒரு கோடி அல்லது ஒன்றரை கோடி ரூபாவை செலவிடவுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் ஜனாதிபதித் தேர்த லில் போட்டியிடும் வேட்பாளர்கள் பிரசாரம் செய்யாமை சிக்கலான நிலை.

இதுவரை பிரசாரத்தில் ஈடுபடாத வேட்பாளர்களில் சுமார் பத்து வேட்பாளர்கள் சுயேச்சையாக போட்டி யிடுகின்றனர்.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரங் களில் சுவரொட்டிகள் மற்றும் கட் அவுட்கள் பயன் படுத்துவது குறைந்துள்ளது - என்றார். (அ)

# தேயிலை உர மானியத்துக்காக 240 கோடி ரூபாய் வழங்கப்பட்டது

கொழும்பு, ஓக. 27

தேயிலை உர மானியத்தை வழங்குவதற்கு தேவையான 240 கோடி ரூபாயை இலங்கை தேயிலை சபை வழங்கியுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு தெரிவித் துள்ளது.

தேயிலை பயிர்ச் செய்கைக்கான உர மானியத் திட்டம் கடந்த வாரம் முதல் அமுல்படுத்தப்பட்டுள்ள தாகவும் அமைச்சு குறிப்பிட்டுள் ளது.

இதேவேளை, அரச உர நிறுவனத்தால் உற்பத்தி செய்யப் படும் 5 வகையான உரங்களின் விலை 4 ஆயிரம் ரூபாயால் குறைக் கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் தெரி வித்துள்ளார்.

தேயிலை பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்படும் ரி 200, ரி 750, யு 709, யு 834, ரி 65 ஆகிய ஐந்து வகையான உரங்களின் விலைகளை அரச உர நிறுவனம் குறைத்துள்ள தாக அமைச்சு சுட்டிக்காட்டியுள் ளது. (ஐ)

## ரூபாவின் பெறுமதி உயர்வு!

கொழும்பு, ஓக. 27

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் நேற்று அமெரிக்க டொலருக்கு நிகராக இலங்கை ரூபாவின் பெறுமதி சற்று அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 295 ரூபாய் 37 சதம், விற்பனைப் பெறுமதி 304 ரூபாய் 64 சதம்.

ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 388 ரூபாய் 85 சதம், விற்பனைப் பெறுமதி 403 ரூபா 97 சதம்.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 328 ரூபாய் 71 சதம், விற்பனைப் பெறுமதி 342 ரூபாய் 57 சதம், சுவிஸ் பிராங் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 346 ரூபாய் 3 சதம், விற்பனைப் பெறுமதி 362 ரூபாய் 44 சதம், கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 217 ரூபா 22 சதம், விற்பனைப் பெறுமதி 227 ரூபாய் 4 சதம், அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 198 ரூபாய் 52 சதம், விற்பனைப் பெறுமதி 208 ரூபாய் 72 சதம்,

சிங்கப்பூர் டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 225 ரூபாய் 20 சதம், விற்பனைப் பெறுமதி 235 ரூபாய் 94 சதம்,

ஜப்பானிய யென் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 2 ரூபாய் 4 சதம், விற்பனைப் பெறுமதி 2 ரூபாய் 12 சதம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பாதிக்கப்பட்ட குடும்பங்களின் இளையவர்களின் கண்காட்சி



கிளிநொச்சி, ஓக. 27

பாதிக்கப்பட்ட குடும்பங்களின் இளையோர்களால் கண்காட்சி ஒன்று நேற்று கிளிநொச்சியில் இடம்பெற் றது.

கிளிநொச்சி பஸ் நிலையம் முன்பாக இடம்பெற்ற கண்காட்சியில், பல்வேறு கருத்துக்களை தாங்கிய சித்திரங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களிலிருந்து வழங்கப்பட்ட கருத்துச் சித்திரங்கள் இதில் காட்சிப் படுத்தப்பட்டன.

குறித்த கண்காட்சியை பலரும் பார்வையிட்டு வரு கின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.08.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.